ஓம்

# வாலாஜாபாத்

| இந்துமத பாடசாலை (1916) | வடலூர் வள்ளலார் மாணவர் விடுதி. (1933) |
| --- | --- |
| **19-ம் ஆண்டு** | **3-ம் ஆண்டு** |

**1935**

# அறிக்கைத்தாள்,

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல்

நிதி மிகுத்தவர் பொற்குவை தாரீர்!
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்!
அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்!
ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்!

பாரதியார்.

**இந்து மத பாடசாலையார்**

வாலாஜாபாத்

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| I. | போங்கல் திருமுகம் | 1 |
| II. | முகவுரை | 2 |
| III. | முன்னை நிலை | 4 |
| IV. | 19-ம் ஆண்டு நிலை | 5 |
| V. | நமது நோக்கம் | |
| | 1. ஒழுக்கமே விழுப்பம் | 6 |
| | 2. பொதுநலத் தொண்டு | 7 |
| | 3. அன்னை மொழியில் ஆர்வம் | 7 |
| | 4. சமயப் பற்று | 8 |
| | 5. உயர்வு தாழ்வு இன்மை | 8 |
| | 6. உடல் உரம் போற்றல் | 9 |
| | 7. கைத்தொழிற் பயிற்சி | 10 |
| | 8. குருகுல முறை... | 11 |
| | 9. மேலே படிப்பிக்க முயலல் | 11 |
| VI. | கல்வி வளர்க்கும் புது முறைகள் | |
| | 1. பிள்ளைகள் தவறாது பள்ளிக்கு வர | 12 |
| | 2. முறையாகப் பாடம் குறையாது நடக்க | 13 |
| VII. | உட்பிரிவுகள் | |
| | 1. மெய்கண்டார் மாணவர் கழகம் | 13 |
| | 2. ஞானசம்பந்தர் நாற்குழுமம் | 14 |
| | 3. வாகீச இலவச வாசகசாலை | 15 |
| | 4. சுந்தரானந்த நிலையம் | 15 |
| | 5. நாடக நன் மன்றம் | 16 |

# பொங்கல் திருமுகம்

வாலாஜாபாத்,
12–1–1936.

அன்பிற் சிறந்த பண்பினிர்!

வணக்கம் கணக்கில.

தென்னாட்டுப் பெரு விழாவாகிய பொங்கல் நன்னாளன்று இத் திரு எழுத்து தங்கள் அன்பார்ந்த கையை யடையும் பேறு பெறும். தங்கள் திருக்கரத்தில் இது உறும் அதே நேரத்தில், தங்களுடைய அன்பினைப் புகழ்ந்து, அருளினை வியந்து, உள்ளங் குளிர்ந்து, உவகை பூரித்து, தங்கட்கு நீண்ட ஆயுளும், நிறைந்த செல்வமும், பெரிய தோர் வாழ்வும், குறைவிலா நலம் பலவும், உலகம் போற்றும் உயர் தர மக்கட் பேறும், உண்டாதல் வேண்டும் என இறைஞ்சும் பணி யில் இனிது நிற்போம்.

எங்களது பள்ளியும் விடுதியும் பல ஆண்டு பலரும் போற்ற விளங்கி வருவதும், இனியும் நாளோடு நாள் உயர்ந்து ஓங்கி வளர நிற்பதும், தங்களதும், தங்கள் போன்றாரதுமான, அன்பின் செய்கையினாலும், அருளின் திறத்தினாலுமே யாகும், என்னும் உண்மையினை இந்நல் வேளையில் நன்றி கூர்ந்து எண்ணி, நெஞ்சம் இனிக்க நினைப்பூட்டுவது எங்கள் இன்பம் மிக்க கடமையாகும்.

நினைப்பூட்டும் முகத்தால், தங்கள் அன்பின் குழவிகளாய பாடசாலை, மாணவர் விடுதியின் அறிக்கையினை இத்துடன் தங்கள் அன்பார்ந்த பார்வைக்கு அனுப்பி வைத்திருக்கின்றோம்.

பொங்கல் நல்விழாவில், பள்ளிக்கும், விடுதிக்கும் பல்லாண்டு கூறி நல்வாழ்த்து செய்யப் பணிந்து வேண்டுகிறோம்.

இங்ஙனம்,
தங்கள் அன்பும் பணிவு மார்ந்த,

இந்துமத பாடசாலையார்.

வாலாஜாபாத்

# இந்துமத பாடசாலை

# 19-ம் ஆண்டு அறிக்கைத் தாள்

---

## முகவுரை

எல்லாம் வல்ல இறைவனது திருவருளினாலே, 1916-ம் ஆண்டு துவக்கப் பெற்ற இப்பள்ளிக்கூடம் ஆண்டிணுக்கு ஆண்டு வளர்ச்சி யுற்று, இன்றைக்குப் பத்தொன்பது வயதுடன் திகழ்தருகின்றது. இந்த பத்தொன்பது ஆண்டுகளாக நமது நாட்டுப் பல பேரறிஞர்கள் (பெயர்ப்பட்டியை இணைப்பில் காண்க) இப் பாடசாலையினைப் பார்வையிட்டு, இதன் நடை முறைகளை வியந்து மகிழ்ந்து போற்றி, அவர்கள் கருத்துக்களை எழுதிவைத்தும் போயிருக்கின்றனர். 1919-ம் ஆண்டிலே இப்பள்ளியைக் கண்ட ஜில்லா நீதிபதி பெருந்திரு வி. வேணுகோபால் செட்டி ஐ.ஸி.எஸ். எழுதிச் சென்றிருப்பதைப் பாருங்கள். "மாணவர்கள் ஊக்கத்துடன் படிக்கிறார்கள். ஆசிரியர்கள் சிறந்த வகையில் கற்பிக்கின்றார்கள். வகுப்பு வேற்றுமைகட்கு ஒரு சிறிதும் இடங்கொடாத வகையில் நடத்தப் பெறுவது இதன் சிறப்பாகும். இது பல வகையிலும் ஒரு முன் மாதிரியான பாடசாலை யாதலினால், இதற்கு எல்லோரும் உதவி செய்யவேண்டும்."

1920ல் சென்னை நகராண்மைக்கழகத் தலைவர் சர். பி. தியாகராய செட்டியார் பி. ஏ. என்னும் பெருந்தகையார் மகிழ்ந்து சொல்வதை நோக்குங்கள்.

"மக்களுக்கு வேண்டிய பொருள்களைப் போதிப்பதற்கென ஒரு பாடசாலையாவது அறிவுக்குப் பொருத்தமான முறையில் நடத்தப்படுவது கண்டு களிபேருவகையடைகின்றேன். என் வாழ்நாளில் நான் பார்த்த பள்ளிக்கூடங்களில், என் மனதுக்குப் பிடித்தது இதுதான் முதலாவது."

1926ல், இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பேராசிரியரான திரு. பிரான்ஸிஸ் கிங்ஸ்பரி என்னும் பெரியார், பாடசாலையைப் பார்வையிட்டு எழுதுகிறார். "பண்டைக்காலப் பொருள்களில் சிறந்தனவற்றை யெல்லாம் விட்டுவிடாமல், தற்காலத்து முறைகளில் நல்லனவற்றை யெல்லாம் இப்பள்ளி பயன் படுத்திக்கொண்டு வருகிறதாக நான் காண்கிறேன். அறிவிலே வல்லவர்களாவதோடு சிறுவர்கள் சமய உணர்ச்சியிலும், ஒழுக்க நெறியிலும் மேன்மை யடைகின்றனர்."

1928ல், திரு. எஸ். வி. பால்ராஜ் பி. ஏ. எல். டி. அவர்களது (ஜில்லா கல்வித்தலைவர்) மதிப்புரையை உற்று நோக்குங்கள்.

"ஆர்வத்தோடும், மிகச்சிறந்த முறையிலும் இப்பள்ளி நடத்தப் பெறுகின்றது. சுற்றுப்புற பள்ளிக்கூடங்கள், இதனைக் கண்டு நாமும் இப்படி ஆகமாட்டோமா என்று அவாவும் ஆர்வமும் கொள்ளும்படி, முன் மாதிரியான பாடசாலையாக, இருத்தற்குரிய உயர்ந்த நிலையிலேயே தொடர்ந்து இருந்து வருகிறது."

1931ல் சென்னை அரசாங்க மந்திரி கனம். பி. டி. ராஜன் பி.ஏ. (ஆக்ஸன்) பார் அட்லா அவர்கள் கூறுகிறார். "இது ஒப்பற்ற பள்ளிக்கூடம். உண்மையான கல்வியைக் கற்பிப்பதில் கொண்டுள்ள முயற்சி வெற்றி பெறுமாறு நான் வாழ்த்துகிறேன்."

1933ல், சென்னை மாகாண கல்வித்துறையின் துணைத்தலைவர் திரு. டி. சதாசிவ ரெட்டியார் எம். ஏ. அவர்கள் சொல்கிறார்.

"பாடசாலையின் ஒப்பற்ற சிறந்த நடை முறையைக் கண்டு ஆச்சரிய மடைந்தேன். சுற்றுப் புறங்களுக்கு இது ஒரு முன் மாதிரியான பாடசாலையாகும்"

1935ம் ஆண்டிலே பாடசாலையைப் பார்வையிட்ட அறிஞர்களது மதிப்புரை பின்னர் வருகிறது. ஈண்டு முன்னுரையை முடிக்கு முகத்தால் திருக்கோயிலூர் ஆதீனம் திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீ ஞானியார் மடாலயத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முக மெய்ஞ் ஞான சிவாச்சாரிய சுவாமிகளது அருள் ஆசி மொழிகளிலே ஒரு துளி இங்கே தருகின்றோம்.

"இப்பாடசாலை தென்னாட்டிலுள்ள பாடசாலைகட்கே முன் மாதிரியாக இருக்கின்றது என்பது முகமன் அன்று உண்மையே."

இவ்வாறு ஆண்டுக்கு ஆண்டு சிறந்து வளர்ந்து ஓங்கி வரும் இப்பள்ளியினது 19ம் ஆண்டு அறிக்கையினை மிக்க மகிழ்ச்சியோடு ஈண்டு வெளியிடும் பேறு பெற்றிருக்கிறோம்.

## முன்னை நிலை

தற்போது சாதாரணமாகப் பாடசாலைகளில் கையாளப் பெற்று வரும் போதனைமுறையிலுள்ள குறைகள் பலவற்றை அறிந்துள்ளது காரணமாக இம்முறையையே ஒரு புதுவழியில் மாற்றியமைக்க வேண்டுமென்னும் எண்ணம் பலருடைய உள்ளத்திலே தோன்றி வளர்ந்து கொண்டிருக்கிறது. கவிஞர் பெருமான் ரவீந்த்ரநாததாகூர் அவர்களின் திருவுள்ளத்திலே உதித்த இத்தகைய எண்ணம்தான் இன்று வங்கநாட்டிலே "விஸ்வ பாரதி"யாக விஸ்வரூபமெடுத்திருக்கிறதென்பதையும், இந்த வழியிலே தென்னாட்டு அறிஞர்கள் எடுத்துக்கொண்ட தீவிர முயற்சியின் பலனே தற்போது தென்னாட்டில் மேம்பாடுற்று விளங்கும் சென்னை ராமகிருஷ்ண மடத்தைச் சார்ந்த மாணவரில்லமும் கலாசாலையும் என்பதையும் அறிஞர்களுக்கு நாம் எடுத்துக்கூற வேண்டியதில்லை. இந்தப் பாடசாலையும், இதனை நடத்தும் பாக்கியம் பெற்றவர்களுக்கு, குறையில்லாத, உயர்ந்த, ஒப்பற்ற, முன்மாதிரியான முறையிலே சிறுவர்களுக்குக் கல்வி புகட்டுவதற்கான தொண்டை மேற்கொள்ளும்படி கலைவடிவான ஆண்டவன் இட்ட கட்டளையின் பயனாகவே தோற்றுவிக்கப் பெற்றது. வாலாஜாபாத்தானது, தென்தமிழ் மன்னர் தலை நகராகக் கொண்டு ஆண்டதும், இறைவன் அன்பர் பலர்க்கு அருள் செய்ததுமான காஞ்சிபுரத்திற்குக் கிழக்கே ஏழு மைல் தூலைவில்,பாலாற்றின் வடகரையில், ஆற்றுக்கும் ஊருக்கும் இடையிலே இடமில்லாமற் படி, அவ்வளவு ஒட்டியமைந்துள்ள, சோலை சூழ்ந்த அழகிய ஓர் ஊர். இதற்குச் சுற்றுப்புற மக்களால் வழங்கும் பெயர் தண்டுசிவரம் என்பதாகும். புலவர்கள் இவ்வூரை ஸ்ரீபுரம் என்றும் சிவபுரம் என்றும் அழைப்பர். தென் இந்திய இருப்புப் பாதையிலே காஞ்சிக்குக் கிழக்கால் அடுத்த இரண்டாவது ஸ்டேஷன்.

இந்நல்லூரிலே, 4-9-1916லே, வாடகையின்றி இலவசமாகக் கிடைத்த ஒருசிறுகோவில் மண்டபத்திலே, ரூ.5 சம்பளத்தில் ஓர் ஆசிரியரை வைத்துத்தரையில் அமர்ந்தநான்கு மாணவர்களுக்குச் சாதாரண பாடஞ் சொல்லிக் கொடுக்க ஏற்பாடாயிற்று. அன்பர் இருவரது சொந்த செலவில் நடந்து வந்தது. சர்க்காரில் வரும் உதவிப் பணத்தைப் பிழைப்புக்காக எதிர் பார்க்கவில்லை. கையில் பணங்குறைந்தபோது, ஈரநெஞ்சத்து நண்பர் பலரை நண்ணி பிச்சையேற்றும் பாடசாலையை வளர்த்து வரவேண்டியிருந்தது. ஓர் ஆண்டில் இருந்ததை விட அடுத்த ஆண்டில், இருக்கும் இடத்திலும், மாணவர் தொகையிலும், ஆசிரியரது எண்ணிக்கையிலும், போதனை முறையிலும், மேம்பாடு தோன்றிக் கொண்டு வருவதாயிற்று.

அறிக்கையாண்டுக்கு முன் ஆண்டாகிய 1934ல், 545 இளஞ் சிறுவர்களும் சிறுமிகளும் படித்தனர். 30 ஆசிரியர் கற்பித்தனர். நான்கு கட்டிடங்களில் பள்ளி நடந்து வந்தது. சிறார் அமரவும் கல்விகற்பிக்கவும், வேண்டிய பல நலங்கள் செய்து வைக்கப்பெற்றன. மாதமொன்றுக்கு ரூ 500/ ஆசிரியர் சம்பளமாக வழங்கப்பெறுவதாயிற்று. துணி நெய்தல், பாய் மிடைதல், சமுக்காளம் போடுதல், தச்சுவேலை, சுவடி கட்டல், பயிர்த்தொழில், தோட்டவேலை முதலிய வாழ்வு நடத்துதற்குத் துணையான பல கைத்தொழில்கள் கற்றுக் கொடுக்கப் பெறலாயின. பாலாற்றங்கரை மீதிலேயே பலகாணிப் பரப்புள்ள ஒரு பெரிய தோட்டத்தை விலைக்கு வாங்கி அதில் கட்டிடங்கள் அமைத்து, அவற்றில் வள்ளலார் மாணவர் விடுதி யென்னும் பெயராலே, 50 மாணவர்களைக் கொண்டதும் பெரும்பாலும் இலவச உணவளிப்பதுமான மாணவர் விடுதி நடந்து வந்தது.

## 19-ம் ஆண்டு நிலை

1934-ம் ஆண்டாகிய 18ம் ஆண்டிலே நிலவிய உறுப்புக்கள் பலவும் முன்னிலும் மேம்பாட்டுடன் நடந்து வருகின்றன.

இவ் 1935ல் 579 மாணவர்கள் 35 ஆசிரியர்களின் கீழ் பயிற்சி பெற்றுவருகின்றனர். துணி நெய்தல் முதலிய பழைய கைத்

தொழில்களோடு தையல் வேலை, கலாய் பூசல் முதலிய புது முறைகள் இவ்வாண்டு ஆரம்பிக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு துறையிலும் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள், மாணவர்களைத் தக்க முறையில் பயிற்றுகின்றனர். வள்ளலார் மாணவர் விடுதியில் சுமார் 100 பிள்ளைகள் உண்டு தங்கி வருகின்றனர். விடுதியில் 12 ஆசிரியர்கள் உடனிருந்து மாணவர்களது நலத்தைக் கவனித்து வருகின்றனர். ஒரு மிகப் பெரியதோட்டத்தில் விடுதி நல்ல கட்டடத்தில் அமைந்திருக்கின்றது. இவ்வாண்டு இப்பாடசாலையைக் கண்ட பெரியார்களின் உரைகளைப் பின் தருகின்றோம். அவர்களது உரைகளிலிருந்து தாங்களே இப் பாடசாலையின் இவ்வாண்டு வளர்ச்சியை அறிந்து கொள்ளச்சாலும்.

## நமது நோக்கம்

இப் பாடசாலையை நடத்துவதிலே கொண்டுள்ள நோக்கங்கள் பின் வருவன.

### (i) ஒழுக்கமே விழுப்பம்

பலபடப் படிப்பதெல்லாம், ஒழுக்கத்திற் சிறந்து நல்வாழ்க்கை செய்வதற்கே யென்பது அறிஞர் பலரும் அறிந்த உண்மையாகும். இக்காலத்துக் கல்வி முறையிலே, இவ்வருமையான பகுதியாகிய ஒழுக்க வளர்ச்சிக்கு இடமில்லாமல் இருக்கின்றது என்று குறை கூறுகின்றனர். இக் குறையை நீக்கவேண்டும் என்பது எங்கள் முதல் நோக்கம். படிப்பிலே வளப்பம் அடைவதோடுகூட, அடைவதற்கு முன் அணியாக, சிறுர்கள் பெரியோர் போற்றும் நல்ல ஒழுகலாற்று முறைகளைக் கற்று அவற்றின்படி ஒழுகவேண்டியதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

விடியற்காலத்தில் தூக்கத்தினின்றும் எழுந்திருந்து, கடவுளை நினைந்து பாடி, நீராடி, தூயவுடை அணிந்து, பாடங்களை ஒழுங்காய்ப் படிக்கவேண்டும் என்று திட்டம் செய்து வருவதோடு, அப்படியே நடக்கிறுர்களாவென்று பார்த்தும் வருகிறோம். அடக்கம், ஊக்கம், அன்பு, அறம், முதலிய உயர்ந்த குணங்களைப் பற்றியெல்லாம் சிறுர்களுக்கு உதாரண முகத்தால் விளக்கிக் கூறி, அந்நற் பண்புகளின் படியே வாழ்க்கையை நடத்தும்படி செய்து வருகிறோம் தீய ஒழுக்

கத்தால் வரும் கேடுகளைச் சிறார் அறியும்படிப் பண்ணி அவ்வழி யிலே போகவொட்டாது தடுக்கிறோம்.

இப்பள்ளியிலிருந்து வெளிச்செல்லும் சிறார்கள், ஒழுக்க சீலர்க ளாக, அவர்கள் சென்று வாழும் ஊரினுக்கும், சுற்றுப் புறத்தினுக் கும், நாட்டினுக்குமே, ஒழுக்க ஒளி விளக்கங்களாகத் திகழ்ந்து, மக் களைத் தங்கள் முன் மாதிரியினாலேயே நன்னெறிக்கு ஆளாக்கும் அரும் பெற்றியர்கள் ஆவார்கள் என்னும் நம்பிக்கையுடையோம்.

## (ii) பொதுநலத் தொண்டு

நல்ல ஒழுக்கத்தின் பயன் தன்னலம் கருதாது பிறர்க்கு உழைத்தலாகும் என்னும் உண்மையினைச் சிறாரது உள்ளங்களில் பதியவைக்கிறோம். உயிர்களுக்கு இரங்கி, அவற்றின் நலத்திற்கு உழைக்காதவன் கடவுளை வழி படுவதனாலும் பயன் ஏதும் பெறான் என்று சிறார்கள் நன்கு உணரச் செய்கிறோம். எந்தெந்த வகையில் மக்களுக்குத் தொண்டு செய்ய இயலுமோ அந்தந்த வகையில் எல் லாம் சிறார்களைப் பணியாற்றப் பழக்குகிறோம்.

எந்தத் தொண்டையும் இழிவாகக் கருதாமல் வீண் கௌரவம் பாராட்டிக்கொண்டு இது தான் செய்யலாம், இது செய்தால் தாழ்வு வந்து விடும் என்று எண்ணாமல், எப்பணியையும் அன்புடன் செய் யும் மனப்பான்மையை வளர்த்து வருகிறோம்.

## (iii) அன்னைமொழியில் ஆர்வம்

நமது தாய்மொழி இக்காலத்தில் விளங்குன்றி யிருப்பதற்குரிய காரணங்களில் முக்கியமானதொன்று நமக்கு அம் மொழியிலே ஆழ்ந்த பற்று இன்மையே யாகும். இப்பற்றினைச் சிறார்களது இளமையுள்ளங்களிலே பற்றும்படிச் செய்வது எங்கள் கடமையா கக் கொண்டுள்ளோம். ஒவ்வொரு வகுப்பிலும் சாதாரண கல்வி முறைத் திட்டத்திற்கு அதிகமான அளவிலே தமிழ்ப்பாடப் பகுதி களைச் சொல்லிக் கொடுக்கிறோம். எட்டாம் வகுப்பு தேறிச் செல்லும் மாணவன் தனது தாய்மொழியைத் திருத்தமாகப் பேச வும் எழுதவும் பழகிக்கொள்வது மல்லாமல், மேலும் படித்துப் புலமை பெறவேண்டும் என்னும் ஆர்வத்துடனே, மொழியை

வளர்க்கப் பாடுபடவேண்டும் என்னும் அவாவுடனே வெளியில் செல்லுவதற்கான வகையிலே தமிழ் மொழியைப் பயிற்றுவிக்கிறோம். நம் மொழியிலுள்ள உயர்தனிச் செம்மை சிவணிய இலக்கண இலக்கியங்களில் சுவை கொள்ளுமாறு சிற்சில பகுதிகளின் இனிமையினையும் மேன்மையினையும் விளக்கி வருகிறோம்.

### (iv) சமயப் பற்று

சமய நற்பயிர் சாலப் பயன் அளித்தற்கு உரிய விதையிடும் காலம் இளமைப்பருவமேயாகும். இளந்தூய்மை உள்ளங்களிலே இறைவன் உண்மையைப்பற்றிய உறுதி வேர் ஊன்றி நிலைத்து விடுமானால், பின்னர், எத்தகைய சண்டமாருதத்தினாலும் சமய நற்பயிர் சாய்க்கலாகாது ஓங்கி வளர்ந்து உத்தமன் பேர் பாடும்.

இந்நுணுக்கத்தினை நனியறிந்தவர்களாய், இளஞ் சிறார்கள், சமய ஒழுக்கத்திலே சிறிதும் குன்றாதவகையிலே நடந்து கொள்ளும்படி திட்டம் செய்கிறோம். பரம்பொருளினைப் பரந்த உள்ளத்தினால் நிறைந்த அன்பினோடும் கசிந்து உருகிக் கனிந்து பாடிய, அடியார் ஆழ்வாராதிகளது அருட் பாடல்களைச் சிறார்கள் மனப்பாடஞ்செய்து, உருக்கமான குரலில் உளங்குளிரப் பாடப் பழக்குகிறோம். சமயப்பொருள்களைச் சிறார்களது சின்ன நன்மனங்களிலே சிறுகச் சிறுகச் செலுத்தி, நமது சமய உண்மைகளைப்பற்றி சிறார்கள் அறிவு பெறும்படிச் செய்கிறோம்.

உண்மை நெறியினை உள்ளபடி அறிந்து கொள்ள வேண்டுவதோடு, சிறார்கள், சமயத்தின் பேரால் சமூகத்தில் வழங்கி வரும் பல ஒவ்வாத பழக்கங்களை ஒதுக்க வேண்டும் என்றும் விளக்குகிறோம். போலிச் சமயக்கொள்கைகளையும், சமய வேறுபாட்டுச் சண்டைகளையும் சிறார்கள் வெறுக்கும்படி தெளிவு தந்து வருகிறோம்.

### (v) உயர்வு தாழ்வு இன்மை

மக்கள் பிறப்பு ஒன்றினாலேயே சிறிதும் வேறுபாடுடையவர்கள் அல்லர் என்னும் உண்மையைச் சிறார்கள் நன்கு உணரும்படிச் செய்து வருகிறோம். பிறப்பினால் வேறு பாடு கற்

பிக்கும் கொடிய வழக்கத்தினை அறவே ஒழிக்க ஒவ்வொரு இளைஞனும் பாடுபட வேண்டும் என்னும் ஆர்வத்தினை ஊட்டி வருகிறோம். நம் நாடு மேன்மையடைவதற்குரிய பல வழிகளிலே முதன்மையானது சம நோக்கக் கொள்கைக் கொடியினைத் தூக்கிப் பிடிப்பதேயாகும் என்று வற்புறுத்தி வருகிறோம்.

தீண்டாமை யென்னும் திருட்டுப் பேய் இருக்கும் இடந் தெரியாமல் இரிந்து ஓட வேண்டும் என்பது எங்கள் பெரு நோக்கம். வகுப்புக்களிலே தீண்டத்தக்கவர்களுக்கென்றும் தீண்டத்தகாதவர்களுக்கென்றும் தனித்தனி இடமே கிடையாது. தம்மைத்தாமே உயர்வென்றும் தாழ்வென்றும் கருதிக்கொள்ளும் நமது மக்கள் சமூகத்தினைச் சேர்ந்த சிறுர்கள் பலரும், சிறிதும் வேறுபாட்டு நினைவின்றி ஒருவர் பக்கத்தில் ஒருவர் நெருங்கி யமர்ந்து பாடம் கேட்பதும், பல வகுப்பினைச் சேர்ந்த ஆசிரியன்மார்களும் சிறுர்களுக்கு முன் மாதிரியாக ஒரு துளியும் வித்தியாசம் இல்லாமல் நடந்து கொள்வதும், ஒரு குக்கிராமத்தில் காணக்கூடிய வியப்புடைக் காட்சிகளாகும். பாடசாலையினைப் பார்வையிட்ட பல அறிஞர்கள் இச்சம நிலைப் பெருமையினைக் கண்டு களித்து வியந்து கூறி, விதந்து ஓதிச் சென்றிருக்கின்றனர்.

(vi) உடல் உரம் போற்றல்.

இக்காலத்துப் பள்ளிச் சிறுவர்கள் உடல் உரங்குன்றியவர்களாக இருக்கின்றுர்கள் என்னும் குறை பெரிதாக இருக்கின்றது. இக்குறை எமது பாடசாலையைப் பொருத்த மட்டில் ஒரு சிறிதும் இருத்தல் ஆகாது என்பது எங்கள் நோக்கம். இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் நல்ல உடல் வளமை வாய்ந்தவர்களாக, செம்மை பூண்டவர்களாக இருத்தற்குரிய பயிற்சிகளைச் சிறுர்க்குக் கற்றுக் கொடுத்து வருகிறோம். அப்பயிற்சிகளைச் சிறுர்கள் விளையாட்டாகவும் விருப்பத்தோடும் என்றும் செய்து குன்று உரமும் குறையா நலமும் பெறவேண்டும் என்னும் கருத்தோடு, பலபல சித்திர விசித்திர முறைகளில், இத்துறையில் பயின்ற பல ஆசிரியர்களை வைத்துப் பழக்கி வருகிறோம்.

உடல் உரத்தோடு கூட, பொறுமை, கலந்து வாழும் கடமை, முயற்சி, முடிவில்லா ஊக்கம், முதலிய நல்ல பண்புகளை வளர்க்க

:

வல்ல பயிற்சிகளாய காலடிப்பந்து (Foot Ball) தடுப்படிப்பந்து (Cricket) கொம்படிப்பந்து (Hockey) மேல்வலைப்பந்து (Badminton) கீழ்வலைப்பந்து (Tennis) கைப்பெரும்பந்து (Volley Ball) முதலியவற்றை ஒவ்வொன்றாகப், பொருளும் பிறவும் இடந்தரும் வகையிலே, பயிற்றுவிக்கும் உறுதியுடையோம். சில இப்போதே பயிற்றுவித்தும் வருகிறோம்.

## (vii) கைத்தொழிற் பயிற்சி

அறிவு, ஒழுக்கம், உடல் உரம், கடவுள்கொள்கை, சமநோக்கம், பணி விருப்பம், அன்னைமொழிஆர்வம் இவற்றை வளர்க்கும், படிப்பு, எத்துணைச் சிறந்ததாயினும், வயிற்றுக்கு அன்னம் பாலிக்கும் வழியினை அறிவியாதுபோயின் பெரிதும் பயனுடையதென்று சொல்லிவிட முடியாது. இவ்வுண்மை, ஏழ்மை நாடாகிய நமது நாட்டில் தான் மிக்க விளக்கமாகத் தெரியும். எத்தனையோ மாணவர்கள், எழுத்துக்களை எணிக்கம்பத்தினைப் படுக்கவைத்தது போல அடுக்கவல்ல பல்கலைக்கழகப் பட்டங்களைப் பெற்றிருந்தும் ஆழாக்கு அரிசிக்கு அடிமைத் தொழில் எங்கே கிடைக்குமோ என்று ஏங்கி நிற்பதைக் கண்டு வருவது நமது பாவமாக இருக்கிறது!

இப்பாவத்திலுக்குக் கழுவாய் தேடவேண்டும் என்னும் முயற்சி எங்கள் பெருமுயற்சி யாகும். எங்கள் பள்ளியினின்றும் வெளியேறும் சிறுவன் எவனும், நாழியரிசிக்கு நான் எங்கே போவேன் என்ற ஏக்கம் ஏதும் இல்லாமல், தன் கையைக்கொண்டே தான் தூயநல்வாழ்வு நடாத்துதற்குரிய அரிய கைத்தொழில் முறைகள் பல எமது பள்ளியில் பயிற்றுவிக்கப் படுகின்றன.

நான்காம் வகுப்புக்கு வந்ததுமே சிறார்களது சுவைப் போக்குக்கும், கைந்நயப்புக்கும் ஏற்ப, பாய் மிடைதல் ஒரு சிலர்க்கும், சமுக்காளம் செய்தல் வேறு சிலர்க்கும், துணி நெய்தல் பிறசிலர்க்கும், தையல்வேலை இன்னும் சிலர்க்கும், புத்தகங் கட்டல் பிறிதும் சிலர்க்கும், தச்சு வேலை இதர சிலர்க்கும், பயிர்த் தொழில் எஞ்சிய சிலர்க்குமாகப் பயிற்றுவித்து வருகிறோம். ஒவ்வொரு

கைத்தொழிலைக் கற்பிக்க அக்கைத்தொழிலிலே வல்ல பல ஆசிரியர்களை அமர்த்தியிருக்கிறோம்.

## (viii) குருகுல முறை

எமது பள்ளி மொத்தத்தையுமே ஒரு சிரியகுருகுலமாக்கி விடவேண்டும் என்பது எங்கள் வேட்கை. இப்பள்ளிக்கூடம் தொடங்கிய நாள் முதல் இவ்வெண்ணம் எங்கள் உள்ளத்தில் ஊன்றி வளர்ந்து வந்தது. இதன் பயனாக இப்போது பள்ளியில் படிக்கும் நூறு மாணவர்களுக்கு, அழகிய, ஆற்றங்கரையில் அமைந்துள்ள, இயற்கைத் தோட்டத்தின் நடுவே இட்ட செயற்கைச் செம்மன்றத்திலே, வள்ளலார் மாணவர் விடுதியென்ற பெயரோடு, ஓர் இல்லத்தினை நடத்தி வருகின்றோம். பள்ளியில் எத்தனை மாணர்கள் உண்டோ அத்தனை மாணவர்களும், ஆசிரியர் பலரும் தங்கி குருகுல வாழ்வு செய்து கல்வி வளர்க்கும் சிறப்பினை என்று பெறுவோமோ என்று எதிர் நோக்கி யிருக்கின்றோம்.

## (ix) மேலே படிப்பிக்க முயலல்

எமது பள்ளியிலேயுள்ள எட்டாவது வகுப்பை எட்டி முடித்த பிறகு, சிறுர்களது அறிவுத் திறத்திற்கும், ஆற்றல் வகைக்கும், சுவைப் போக்கிற்கும் ஏற்றபடி, விரும்புகிற சிறுர்களை மேலும் படிப்பதற்காக வெளியூர்களுக்கு அனுப்புகிறோம். சென்னை இராமகிருஷ்ண மாணவர் இல்லம், மணலி மாணவர் விடுதி, செங்கல்வராய நாயகர் கைத்தொழிலகம், அரசாங்க கைத்தொழில் கல்லூரி, வேலூர் மாசிலாமணி முதலியார் இலவச மாணவர் விடுதி, உரத்தநாடு அன்னசாலை, திருவையாற்று அரசர் கல்லூரி, சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம், நாமக்கல் இலவச மாணவர் விடுதி, மன்னார்குடி, திருவாரூர் முதலிய இடங்களில் எமது பள்ளிச் சிறுர்கள் பலபல ஆண்டு பயிலுகிறார்கள்.

அவர்களுக்குரிய நலங்களை நேரே சென்றும், அவ்வப் பாடசாலை விடுதி முதலியவற்றின் தலைவரோடு கடிதப்போக்கு வரத்து வழியாகவும் கவனித்து வருகிறோம். ஏழைப் பிள்ளைகள் பலர் இலவச உணவும் படிப்பும் இங்கே பெறுவதைப்போலவே வெளியிடங்களிலும் பெற்று மேன்மையுற்று முன்னுக்கு வருகின்றனர்.

## கல்வி வளர்க்கும் புது முறைகள்

### 1. பிள்ளைகள் தவறாது பள்ளிக்கு வர

பாடசாலைச் சிறார் அனைவரும் நாடோறும் ஒருவர் தவறாது பள்ளிக்கு வருதல்வேண்டும் என்பது எங்கள் அவா. அன்றாடம் வாராத பிள்ளைகளின் பெயரை ஆசிரியர் தனியே குறித்துக்கொண்டு அவர்களது பெற்றோருக்கு, வாராமைக்குக் காரணம் எழுதுமாறும், நின்று விடுவதால் நேரும் கெடுதிகளை யுணருமாறும், தவறாது அனுப்பி வருமாறும், கடிதம் வரைகிறார்.

உடனுக்குடனே விரைவாக இக்கடிதங்களைச் சேர்ப்பித்தல் வேண்டும் என்னும் கருத்தோடு, அவ்வப்போது கையால் எழுதி வருவதானால் நேரந்தாழ்க்கும் என்று அஞ்சினவர்களாய், இக்கடிதங்களை எட்டுக்கு இரண்டு பிரதிகளாக அச்சிட்டு, இவ்வேடுகளைக் கட்டுசெய்து புத்தகங்களாக வைத்துக்கொண்டிருக்கிறோம். பிள்ளையினுடையபெயர் தேதி,முதலியவை கடிதங்களில் நிரப்பவேண்டியகாலி இடங்களாக இருக்கும். இவற்றை நிரப்பி ஒருபிரதியைக் கிழித்து உடனே பையன்கள்வசம் பெற்றோருக்கு அனுப்பிவிடுகிறோம்.

கையில் புத்தகத்திலேயே உள்ள மற்றொரு பிரதியைக்கொண்டு பதில் வந்ததா இல்லையாயெனப் பார்த்து வந்து, வாராதபோது நினைப்பூட்டி, கண்டிப்பாய் பதிலை வருவித்து விடுகிறோம். இந்த அச்சுக் கடிதப் பிரதியின் பின்புறத்தில் தவறாது பள்ளிக்கு வருவதனலாய நற்பயன்களும், வாராது இடையிடையே நின்றுவிடுவதனலாய கெடுதிகளும் அச்சு செய்யப் பெற்றிருக்கின்றன. பெற்றோர் இவற்றைப் படித்து அறிந்து தங்கள் சிறாரைத் தவறாது அனுப்பப் பழகி வருகின்றனர்.

இம்முறையோடு, ஆசிரியர்கள் சிறார்களுடைய வீட்டுக்குச் சென்று, பெற்றோர்களை நேரே கண்டு, தவறாது பிள்ளைகள் பள்ளிக்கு வருதலால் விளையும் பயனை விளக்கி வருகின்றனர். சிறார் வரவினைக் கவனித்தற் பொருட்டே ஆசிரியர் கழகம் ஒன்று ஏற்படுத்தப் பெற்று அடிக்கடி கூடி ஆலோசித்து தொழில் புரிந்து வருகிறது. சிறார் வாழும் வீடுகளை ஆசிரியர்க்கு இத்தனையென பிரித்து வகுத்துக் கொண்டு, அவ்வவ் வீடுகளை அவ்வவ் வாசிரியர்

கவனித்துக் கொள்கிறார். சுற்றுப்புற கிராமங்கள் இப்படியே ஆசிரியர்க்கு இத்தனையென வகுக்கப் பெற்றிருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திற்கும் அவ்வக்கிராமத்திலுள்ள ஒவ்வொரு சிறுவன் முதன் மாணவனாக ஏற்படுத்தப் பெற்றிருக்கிறான். அவனும் தன் ஊர்ப்பிள்ளைகள் தவறாது வரும்படி பார்த்துக் கொள்ளுகிறான்.

தவறாது வரும் மாணவர்களுக்கு ஆண்டின் இறுதியில் பரிசுகள் வழங்கப் பெறுகின்றன. எந்த வகுப்பில் நிற்காமல் வரும் மாணவர்கள் நிரம்ப, யிருக்கின்றனரோ அந்த வகுப்புக்கு ஒவ்வொரு மாதமும் ஒரு வெற்றிக் கொடி வழங்கப் பெறுகின்றது. அக் கொடி அம்மாதமெல்லாம் அவ்வகுப்பிலேயே நாட்டப் பெற்று பறந்து மற்றவகுப்புச் சிறார்களது உள்ளங்களில் "அடுத்த மாதம் நம் வகுப்பிற்குப் பெறவேண்டும் இக் கொடியை" என்னும் வேட்கையை யெழுப்பி வரும்.

இம் முறைகளின் சிறப்பை இவ்வாண்டு பள்ளியைக் கண்காணித்த கல்வித்துறை அலுவலினர் பாராட்டி எழுதிச் சென்றிருக்கின்றனர்.

ii. முறையாகப் பாடம் குறையாது நடக்க

ஒவ்வொரு ஆண்டிலும் நடத்தி முடிக்க வேண்டிய பாடங்கள் இவையென முன்னரே வகுத்துக் கொள்வது மல்லாமல், ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொரு வகுப்புக்கு இன்ன இன்ன பகுதிகளை முறையாக நடத்தியாக வேண்டும் என்றும் ஏற்பாடு செய்யப் பெற்றிருக்கின்றது. ஒரு மாதத்தில் முடித்தாக வேண்டிய பாடங்களின் விவரங்களை முன் மாதமே விளக்கமாக எழுதி வகுப்பில் தொங்க விட்டு வருகிறோம். சிறார்களும் இவ்விவரங்களை யறிந்தவர்களாய்ப், பாடங்களை வீட்டிலேயே ஒரு முறைபார்த்து வந்து வகுப்பில் நடக்கும்போது ஐயமற உணர்ந்து கொள்ளுகின்றனர்.

## உட்பிரிவுகள்

1. மெய்கண்டார் மாணவர் கழகம்

இப்பாடசாலையின் அங்கமாக இக்கழகம் அமைந்து மாணவருக்கும் மற்றவர்களுக்கும் பெரும் பயன் அளிக்கிறது. மாணவர்கள்

அவையிடை எழுந்து அச்சமின்றிப் பேசவும், சொல் வன்மையிற் சிறப்புற்று விளங்கவும் இக்கழகம் சிறந்த முறையில் தொண்டாற்றி வருகிறது. இக்கழகக்கூட்டங்கள் மாதமிருமுறை கூடுவதோடுஇடையிடையே சில சிறப்புக் கூட்டங்களும் கூடப்பெறும். நான்காம் வகுப்பு முதல் எட்டாம்வகுப்பு முடியவுள்ள மாணவர்கள் இவ்வவைகளில் பேசிப் பழகுகின்றனர். கீழ் வகுப்பு மாணவர்கள்(4, 5 வகுப்புக்கள்) சேர்ந்தது இளையார் கழகமென்றும் ஏனையோர் சேர்ந்தது முதியோர்கழகமென்றும் இவ்வவை இருகிளைகளாக நடத்தப்படுகிறது. ஆங்கிலக் கூட்டமொன்று மாதந்தோறும் இதன் சார்பாக நடைபெறுகின்றது.

சாதாரண கூட்டங்கள் பள்ளியின் ஆசிரியர்கள் தலைமையிலும், சிறப்புக்கூட்டங்கள் சமூக, தேசிய, கல்வித் தலைவர்களின் தலைமையிலும், நடைபெறும். அப்பெரியார்களது அருஞ் சொற் பொழிவுகளின் பயனை அனுபவித்தற்கு இவ்வவை பெரிதும் பயன்படுகின்றது.

பிற்கால வாழ்வில் வேண்டப்படும் தேர்தல் முதலியவைகளை மாணவர்கள் அறிந்து கொள்ளுமாற்றால் இக்கழக அலுவலாளரை அவர்களே தேர்ந்தெடுத்தல்கையாளப்பட்டு வருகிறது. இத்தேர்தல் கூட்டத்திற்கு உள்ளூர் போலீஸ் அதிகாரி (Sub Inspector of Police) தலைமை வகிப்பது வழக்கம். இம்முறையினால் மாணவர்கள் வாக்குரிமைத் தத்துவங்களை நன்கு அறிகிறார்கள்.

## 2. ஞானசம்பந்தர் நூற்குழுமம்

சிறுவர்கள் பாடங்கற்பதோடமையாது பல்வேறு துறைகளில் வல்லுநர்களாய சிறந்த ஆசிரியர்கள் எழுதிய பல நூல்களையும் பயின்று பயனடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்நூற்குழுமம் ஆரம்பிக்கப்பட்டது. நாள் ஏற ஏற வளர்பிறைச் சந்திரனை போன்று வளர்ந்தோங்கிய இந்நூற்குழுமம், தற்போது (7000) ஏழாயிரத்துக்குக் குறையாத பல மொழிப் புத்தகங்களைத் தன்னகத்தே கொண்டு, பள்ளி மாணவர்களுக்கு மட்டுமல்லாது, பக்கலிலுள்ள எல்லா மக்களுக்கும் போதிய பயனை அளிக்கின்றது. சுற்றுக் கிராமங்களிலுள்ள யாவரும் வேண்டும் பொழுது விரும்பிய புத்தகங்களை எடுத்துச்சென்று அதன் பயனை அனுபவிப்பது கண்கூடு.

ஒவ்வொரு வகுப்பிற்கும் உரிய நிலைப்படி அம்மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் புத்தகங்கள், ஆராய்ந்து பிரித்து வைக்கப் பட்டுள்ளன. அந்தப் புத்தகப் பட்டி ஒவ்வொரு வகுப்பிலும் காணப்படும். மாணவர்களுக்கென ஒதுக்கப்பட்ட வகுப்புக் காலங்கள் தவிர புத்தகங்களை அவர்கள் வீட்டுக்கு எடுத்துச்செல்லவும் அனுமதிக்கிறோம். இவ்வாறு எடுத்துச் சென்ற நூல்கள் மாணவர்கள் படித்த பிறகு ஆசிரியர்களால் சோதிக்கப் படுகின்றன. இவ்வகையில் இந்நூற் குழுமம் சிறந்த தொண்டாற்றி வருகின்றது.

## 3. வாகீச இலவச வாசகசாலை.

நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும், அரசியல், சமூகம், அறிவு, மொழி, சமயம், முதலிய பல் பொருள்கள் பொதிந்துள்ள, தினசரி, வார, மாதப்பத்திரிகைகள் சுமார் 35 (பெயர்களை இணைப்பில் காண்க) இவ்வாசகசாலைக்கு வருகின்றன. பாடசாலை உபயோகிப்பதற்கு மட்டுமன்றி, பலமக்களும் பயனடைய வேண்டுமென்ற கருத்தால் இதை ஒரு இலவச வாசகசாலையாகவே பொது இடத்தில் அமைத்து இருக்கிறோம். இவ்வாண்டில் எண்ணாயிரத்திற்கு அதிகப்பட்ட பலர் இதன் பயனை எய்தினர். இங்கே படிப்பது போக, வீட்டிற்கு எடுத்துச் செல்லவும் இவ்வாசகசாலை இடந்தருகின்றது. ஆகையால் இது "பத்திரிகை வாசிப்பதை உன் ஒரு நாளை[illegible] வேலைகளுள் ஒன்றாகக்கொள்" என்று காந்தியடிகள் கூறிய வா[illegible] விரும்பும் சுற்றுப்புற மக்களுக்கு உரிய நாளில் பங்கெடுத்துக் கொள்ள உதவுகிறது.

## 4. சுந்தரானந்த நிலையம்.

'உளங் குளிர்ந்த போதெலாம் உவந்துவந்து பாடுவன்' என ஒரு பெரியார் கூறியவாறு 'பக்திச் சுவைநனி சொட்டச் சொட்டப்' பாடிய இன் தமிழ்த் தெய்வப் பாக்களை இசையுடன் பாட மாணவர்கள் பழகுகின்றனர். நூற்குழுமமும் வாசகசாலையும் இயற்றமிழ் வளர்ச்சியில் எத்துணை ஈடுபடுகின்றனவோ, அத்துணை இச்சுந்தரானந்த நிலயம் இசைத்தமிழ் வளர்ச்சியில் ஈடுபடுகின்றது. நாடோறும் காலை மாலைகளில் இறைவனைப் பண்ணுடன் பாடுவது இந்நிலையப் பணியாகும்.

இந்நிலையத்தைச் செவ்வனே நடத்துவதற்கு இசைத்தமிழில் வல்லுநரான ஆசிரிய ரொருவரை நியமித்திருக்கின்றோம். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் மாலையில் சிறார்கள் தத்தம் சமயச் சின்னங்களுடன் இருந்து இறைவனைப் பாடிப் பரவுவர். "தூய மனதோடு செய்யப்படும் பிரார்த்தனை கடவுளால் வரவேற்கப் படும்" என்ற தாகூரின் சாந்த மொழிக்கு இலக்காக நிற்கின்றது இந்நிலயம்.

5. நாடக நன்மன்றம்.

வேங்கடங் குமரியிடையில் செழித்தோங்கிய இயலிசை நாடகம் என்ற முத்தமிழ்களுள் இயற்றமிழை நூற்குழுமம் வாசக சாலை இவைகளாலும் இசைத்தமிழைச் சுந்தரானந்த நிலையத்தாலும் போற்றி வளர்த்தல் போன்று நாடகத்தமிழை இந்நன் மன்றத்தால் வளமுறச் செய்கின்றோம். பாடசாலை மாணவர்கள் உள்ளூரிலும் வெளிகளிலும் அடிக்கடி நாடகங்களையும் சொல்லாட்டங்களையும் நடத்தி கற்றோரும் மற்றோரும் உண்மை நிலையினை உணரும்படி செய்து வருகின்றனர். "அப்பர்" "மெய்ப்பொருள் நாயனர்" முதலிய பெரியார்களின் சரித்திரங்களையும் 'மதுவிலக்கு' 'ஜீவகாருண்யம்' முதலியவற்றையும் நடித்துக் காட்டி இருக்கின்றனர்.

6. தேரையர் மருத்துவச் சாலை.

நோயில்லா வாழ்வை விரும்பாத உயிர் இறை படைப்பில் இல்லை. பன்னாட்களாக நம் நாட்டகத்தே வியாதிகளைப் போக்க இயற்கைத் தாயின் இனிய பல மூலிகைகளே உபயோகப்பட்டு வந்தன. இயற்கையிற் காணும் ஒவ்வொரு பொருளும் காய், கனி, கிழங்கு முதலிய யாவும் மக்களின் நோய் தீர்க்க அமைந்ததே யாகும். இதை உலகு உணரும் பொருட்டே இம் மருத்துவச் சாலை அமைக்கப்பட்டது.

பாடசாலையின் மேல்வகுப்பு மாணவர்கள் இதிற்பயின்று அரிய மூலிகைகளை வளர்க்கின்றனர். இதற்கென ஓர் தோட்டம் அமைக்கப்பட்டிருக்கின்றது. மேனட்டு முதல் உதவி (First Aid) என்னும் துணைப்பாடங்களையும் பயில்கின்றனர். பாம்பு, தேள் முதலிய விஷக்கடிகளுக்கும், சொறி, சிரங்கு, கட்டி முதலிய நோய்களுக்கும்,

சுரம் முதலியவைகளுக்கும் தக்க முறையில் மருந்துகள் கொடுக்க மாணவர்கள் பழகி இருக்கின்றனர். பொதுஜன உபயோகத்துக்காக பல மூலிகைகள் தோட்டத்தில் பயிரிடப்பட்டு இருக்கின்றன. சித்த வைத்தியத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர் S. துரைராஜன் என்பவரால் இம்மருத்துவச்சாலையின் முறைகளெல்லாம் நடைபெறுகின்றன.

7. வீமன் விளையாட்டு வெற்றிப்படை.

மாணவர்கள் மாலை வேளைகளை உற்சாகமாக உடற்பயிற்சியில் பழகவேண்டு மென்ற நோக்கத்தில் இது ஆரம்பிக்கப்பட்டது. கல்வி நலத்துக்குத் தேக நலம் முக்கியமாதலால் அக்கல்வியும் தக்க வழியில் போதிக்கப்படுகின்றது. கல்வி இலாகா அதிகாரிகளால் போற்றப்பெறும் முறையான உடற்பயிற்சிகள் முன்னர் கவனிக்கப்படுகின்றன. நம் நாட்டுப் பழைய முறைகளின் பல சிலம்பப் பயிற்சிகளும், மேனாட்டுப் பயிற்சிகளும் பந்து விளையாட்டுகளும் மாணவர் கற்றிருக்கின்றனர். உடற்பயிற்சி உற்சாகத்துக்காக, நூற்றுக்கு மேற்பட்ட விளையாட்டுகள் (Games) மாணவர்கள் கற்றிருக்கின்றனர். இதை மேற்பார்ப்போர் Y. M. C. A. கல்லூரியில் தேர்ச்சி பெற்ற நான்கு ஆசிரியர்களாவர். அவர்கள் உடற்பயிற்சியின் அவசிய அறிவை மாணவர்களுக்கு ஊட்டி வருகின்றனர்.

8. பாலர் விவசாயப் பண்ணை.

புத்தகக் கல்வியைப் போற்றும் முறையுடன் விவசாயத் துறையிலும் மாணவர்கள் ஊக்கங்கொள்ளப் பழக்கப்படுகின்றனர். இப் பண்ணையின் சார்பாக, ஆண்டுதோறும் ஒரு பெரியார் தலைமையின் கீழ்க்கூடி, தாவரங்களால் மக்கட்கு உண்டாகும் நன்மையை விளக்கி ஒவ்வொரு சிறுவனும் ஒவ்வொரு செடிநட்டு செடி நடூ திருவிழாவினைக் கொண்டாடுவான். சிறுர் தம்கைகளாலேயே நாற்றுகளை நட்டு நீர்ப்பாய்ச்சிவருகின்றனர்.

இப்பண்ணையை விவசாய டெப்டிடைரக்டர் பார்வையிட்டுச் சென்றனர். காஞ்சீபுரம் வட்டம் விவசாய இலாகா அதிகாரியின் கீழ் இப்பண்ணை வேலைசெய்கின்றது. நம் நாட்டிற் சிறப்புற்றோங்கும் விவாசாயத்தினை இது வளமுறச் செய்கின்றது.

9. சாரணர் படை

இதில் தற்போது ஐம்பது மாணவர்கள் சேர்ந்திருக்கின்றனர் ஆசிரியர்கள் தக்க ஊக்கத்துடன் அவர்களை மேற்பார்த்து வருகின்றனர். வெளியூர் விழாக்கட்கும் பொதுக் கூட்டங்களுக்கும் இவ்வியக்கம் இயன்ற உதவியை ஆற்றுகின்றது. சாரண மாணவர்கள் செய்ய வேண்டிய கடமை இவையென்பதை வெகு விளக்கமாக இம் மாணவர் அறிந்து அதன் வழி ஒழுகிவருகின்றனர்.

10. வள்ளுவர் தொழிற்சாலை

இதன் சார்பில் துணி நெய்தல், சமுக்காளம் நெய்தல், பாய் நெசவு, தச்சுவேலை, தையல் வேலை, ஈயம்பூசுதல், புத்தகம் செப்பம் செய்தல் முதலிய பலவகைத்தொழில்களை மாணவர் கற்றிருக்கின்றனர். இக்கைத்தொழிற்சாலையில் மேற் குறித்த தொழில்களால் பல பொருள்கள் செய்யப்படுகின்றன.

இச்சாலைக்கு, ஒவ்வொரு தொழிலிலும் தேர்ச்சி பெற்றவர்களையே அவ்வதற்குஆசிரியர்களாக நியமித்திருக்கின்றோம். இச்சாலையில் செய்யும் பல பொருள்களை அடக்கவிலைக்கே கொடுத்து அப்பணத்தையும் நூல்,மரம் முதலியவாங்கவே பயன்படுத்துகின்றோம். பாடசாலை நேரங்களிலன்றி மற்ற நேரங்களில் வேலை செய்யும் மாணவர்கள் தக்க ஊதியமும் பெறுகின்றனர்.

11.வடலூர் வள்ளலார் மாணவர் விடுதி

"நமது தாய் நாட்டின் பண்டைப் பெருமைக்குக் குருகுலங்களே முழுமுதற் காரணம் எனச்சிறிதும் அஞ்சாது கூறுவேன்" என்று தாகூரும் "பகைவரையும் சகோதரரெனக் கருதி நோக்கவும், சிவகாருண்யம் ததும்பவும் குருகுலங்கள் தேவையானவை" எனக் காந்தியடிகளும் கூறிய முறையின் சீரிய நிலைக்கு, நம்பழந் தமிழ் நாட்டுச் சிறந்த குருகுலம் இது எனத் திகழ வேண்டியே இதை ஏற்படுத்தினோம்.

இதில் தற்போது 100 மாணவர்களிருக்கின்றனர். தமிழ் நாட்டுத் தென்கோடியாகிய பாண்டி நாட்டின் தலைநகராம் மதுரை முதல் வடகோடியாம் நம் தொண்டை நாடு வரையிலுள்ள பல்வேறு இடங்களிலிருந்து வந்த மாணவர்கள் இதில் உறைகின்றனர். மாண

வர் மாதம் ஒன்றுக்கு ரூ. 6-0-0 கட்டணம் செலுத்தி உணவும் இலவசப்படிப்பும் பெறுகின்றனர். திறமையுள்ள ஏழை மாணவர்களை இலவசமாகவும் குறைந்த கட்டணத்திலும் சேர்த்துக் கொண்டிருக்கிறோம்.

விடுதிக்கென ஒரு தனியிடம் உண்டு. ஒரு பெரிய தோட்டத்தின் நடுவில் அமைந்த கட்டடங்களில் சமைப்பதற்கும், உண்பதற்கும், உறங்குவதற்கும் தனித்தனி இடங்கள் உண்டு. மாணவர்கள் யாவரும் 12 ஆசிரியர்களின் மேற்பார்வையினுலே தங்களுக்கு வேண்டிய எல்லா சௌகரியங்களையும் செய்து கொள்ளுகின்றனர்.

விடுதி மாணவர்கள் நாள்தோறும் செய்யும் வேலைகளை இணைப்பில் தந்திருக்கின்றோம். அவர்கள் காலை 5-மணிக்குத் துயில் நீத்து, இறைவனது இணைமலர்ப்பாதங்களை யேத்தி, பிறகு பாலாற்று மணலில் உடற்பயிற்சி செய்து, பின் தூயநீராடிச் சமயச்சின்னமணிந்து தம் தம் பாடங்களைப் பயிலுவர். $8\frac{1}{4}$-மணிக்கு உணவு உண்டு பாடசாலைக்குச்செல்வர். மாலையில் மாணவர்களது விளையாட்டு விநோதம் காண்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் என்பது உண்மை. அவர்கள் இரவு 6-மணிக்குவிளையாட்டை முடித்து உணவருந்தி 9-க்கு உறங்குவர்.

இவ்விடுதியின் சார்பாக வெளியூரிலிருந்து வரும் சுமார் 100 ஆதிதிராவிட மாணவர்களுக்கு இடை வேளை உணவு இலவசமாக அளிக்கின்றோம்.

இவ்விடுதி மேன்மேலோங்கி ஒரு சிறந்த குருகுலமாக வேண்டுமென இறைவனை வழுத்துகின்றனம்.

12. குமாரசுவாமி ஆதித்திராவிட இலவச பாடசாலை.

வாலாஜாபாத்துக்குச் சற்று தூரத்திலுள்ள வெள்ளேரியம்மன் கோவிலில் இப்பாடசாலை இருந்து வருகின்றது. அங்குள்ள ஆதித்திராவிட இளஞ்சிறூர் இப்பள்ளிக்கு நடந்துவருதல் கூடாமையால் 3-வது வகுப்புவரையில் அங்கே ஏற்படுத்தி இருக்கின்றோம். அதில் 30 பிள்ளைகள் பயின்று வருகின்றனர். இரண்டு ஆசிரியர்கள் இருக்கின்றனர். அங்கு மூன்றுவது வகுப்பு முடிந்ததும் அம்மாணவர் இந்தப் பாடசாலையில் வந்து சேர்கின்றனர்.

## பொருள் நிலை.

இத்தகைய உயர்ந்த சிறந்த அளவில் நடைபெற்று வரும் இப்பாடசாலையின் வரவோ மிகக் குறைவு, செலவோ அதிகம் என்பதை இணைப்பினால் அறிவீர்கள். அதனால் இத்தகைய நிலையில் ஒவ்வொருவரும் இப்பள்ளிக்கு உதவிசெய்ய வேண்டியது அவசியம்.

இப்பாடசாலை ஆரம்பித்து 20 ஆண்டுகளாயின: வேண்டிச் சென்ற பெரியார்களிடம் பொருள் பெற்றது மிகக் குறைவு: அதனால் பாடசாலை நடப்பதும் முடியாததாய்விட்டது. இதன்பொருட்டு நாங்கள் தற்காலத்தே கையாளும் முறையில் உட்படும் தாங்கள். பள்ளிக்கு உதவிசெய்யும் பயனுடன், வாழ்விற்கு வேண்டியபொருளின்பப் பயனுமாக இரண்டுபயன்பெறுகிறீர்கள். நாங்கள் 62 வயதானதும் 15கோடி ரூபாய் நிரந்தர ஆஸ்திபுடையதும் இந்தியர்களாலேயே நடத்தப் பெறுவதுமாகிய ஓரியண்டல் உயிர் ஒப்பந்தநிதியின் (Oriental Govt. Security Life Assurance Co, Ltd.,) பிரதிநிதிகளாக இருக்கின்றோம்: பிற்கால வாழ்விற்கு வேண்டிய பொருள்பெற விரும்பி இவ்வுயிர் ஒப்பந்த நிதியில் எங்கள் மூலமாக ஒப்பந்தம் செய்து கொள்வார்களால் வரும் கமிஷன் அனைத்தும் நம்பள்ளியின் ஏழை மாணவர்களின் பொருட்டே செலவிடப்படும். இப்பாடசாலை என்றும் நிலைத்து நிற்பதற்கென மேற்கூறிய நிதியிலே எங்கள் உயிர்களை ரூ 30,000க்கு இன்ஷியூர் செய்து பாடசாலைக்கென எழுதிவைத்திருக்கிறோம்.

அதற்காக வருடந்தோறும் ரூ.1,500 பகுதிப்பணம் கட்டி வருகின்றோம். எனவே இவைகளெல்லாம் ஓங்கி வளர்தல் வேண்டுமென உண்மை அன்போடு விழையும் தங்கள்போன்ற பெரியார்கள் உயிர் ஒப்பந்தம் செய்து கொண்டாலன்றி வேறு வழியில்லை. ஆதலால் தங்கள் பொருளை வளர்ப்பதற்கும், ஏழைமாணவர்களை காப்பதற்கும் இன்றே எங்கள் ஓரியண்டல் உயிர் ஒப்பந்த நிதியில் சேரத் துணிந்து மூந்துங்கள் முன்னவனும்முன்னிற்க.

## 1934-35ல் பார்வையிட்ட பெரியார்களது
## உள்ளக் கருத்துக்களின் சுருக்கம்.

I am indeed very grateful to Messrs. Panchaksharam and Masilamani Mudaliar for having given me an opportunity of visiting the Hindu Religious School, Walajabad. I was taken through the various classes this morning and was deeply impressed with the general atmosphere and bearing at the School and its inmates. Some of the recitations given by the boys were remarkably good while the exhibition of their powers was a real treat. The small hostel for boys is conducted on broad national lines and seems to me to have as its main object, the development of such important virtues as mutual help, self-confidence, team-spirit etc.,

I wish the school every success and pray that it may grow from more to more in the years to come. I should also compliment the management on the extra-ordinary zeal and interest which they are bestowing on it.

A. Subramanyam, M. A.,

25–4–34. Dy. C. M. A. Poona.

வாலாஜாபாத் இந்துமத பாடசாலையைப் பார்வையிட சந்தர்ப்பங் கொடுத்த திருவாளர்கள் பஞ்சாக்ஷரம், மாசிலாமணி அவர்களுக்கு என் நன்றி யறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். இக்காலை இப்பாடசாலையிலுள்ள பல் வேறு அங்கங்களையும் பார்வையிட்டேன். சில பிள்ளைகள் சொல்லிய சில பாடல்கள் அழகாயிருந்தன. மாணவர்கள் பயிலும் விதம் நேர்த்தியானது. ஒரு சிறிய விடுதியும் மாணவர்கள் நாட்டுக்கு நலம் புரியவும், சிறந்த தொண்டு களியற்றவும், சுயநலமற்றவர்களாய் விளங்கவும் நல்லவர்களாகும் நிலையில் நடைபெற்று வருகின்றது. இப்பாடசாலை ஆண்டுகள்

தோறும் மேன்மேலும் வளர்ச்சியுற வேண்டுமென ஆண்டவனை வழுத்துகிறேன். இப்பெரிய நிலையில் இப்பாடசாலையை ஊக்கத்துடன் முன்னுக்குக் கொண்டுவரும் பெரியார்களைப் போற்றுகின்றேன்.

A. சுப்பிரமணியம், எம் ஏ.
Dy. conrt, of mily Accts 25—4—34.

It gave me great pleasure to visit this useful institution in the company of my friends Messrs. Muthukumaraswamy Mudaliar and M. S. Koteeswaran. I had the honour of witnessing the variety show got up by the pupils and I enjoyed a pleasant evening. The working of the hostel presented a unique example of the liberty of the pupil, thus sowing while young the seed of democracy in the future citizen. The individual system of teaching is successfully worked in the school. The manual training section is popular. The facts above prove the practical utility of the Institution as a village school. It is run on model lines and the adult section represented by the public reading room and the library are a nccessary adjunct which serves a real purpose. *Such one* institution in each village would solve the rural problem and Messrs. Panchakshara Mwdaliar and Masilamani Mudaliar deserve earnest congratulation and emulation. Theirsis a truly noble work and nobility has its own reward in the service of the country. My friends from Madras agree with the sentiments I have expressed.

T. PURUSHOTHAMA MUDALIAR,
19—9—34. Municipal Commissioner, Erode

என் நண்பர்கள் திருவாளர்கள் முத்துக்குமாரசுவாமி முதலி
யார் M. S. கோடீஸ்வரன் இவர்களுடன் இப்பாடசாலையைப் பார்வை
டது மிக மகிழ்ச்சியை அளித்தது. மாணவர்களால் காட்டப்பட்ட
பல்வேறு விளையாட்டுகளைக் கண்டு ஆனந்தமுற்று இன்று மாலையை

மிக இனிமையாகக் கழித்தேன். பிற்காலக் குடி அரசு வாழ்க்கைக்கு விதை இடும் ஆதாரமே யென மாணவர்களாலேயே நடைபெற்று வரும் மாணவர் விடுதி ஒப்புயர்வற்று விளங்குகின்றது. மாணவர்களுக்கு தனித்தனியே போதிக்குமுறை (individual system) நன்றாக நடை பெறுகின்றது. கைத்தொழிற்சாலையும் சிறப்புடன் நடை பெறுகின்றது. கிராமப்பாடசாலைக்கு எளிய முறையாகிய சிறந்த அங்கங்களை இது கொண்டுள்ளது. இது ஒரு புதிய சீர்திருத்த முறையின்படி நடைபெற்று வருகின்றது. கிராம ஜனங்களுக்கு இதில் உள்ள இலவச வாசக சாலையும் நூற்குழுமமும் மற்றுள்ள அங்கங்களும் தகுதியான உண்மை முறையில் உதவுகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் இத்தகைய பாடசாலை ஒன்று இருப்பின் நன்று நாட்டுக்கு நலம்புரிய வேண்டுமென எண்ணங்கொண்டுள்ள திருவாளர்கள் வா. தி. பஞ்சாட்சர முதலியார், மாசிலாமணி முதலியார் அவர்களது உண்மை நோக்கம் நிறைவேறும். அவர்களது பணி உயர்ந்ததாகும். நாட்டுப்பணியில் இவ்வுயர்ந்த பணியே தான் பயனடையும். சென்னையிலிருந்து உடன்வந்த என் நண்பர்கள் நான் சொல்வதை அங்கீகரித்தார்கள். T. புருஷோத்தம முதலியார்,

முனிசிபல் கமிஷனர், ஈரோடு

I visited the school on 28-12-34. It is extremely gratifying to see its excellent working in all respects. The institution is run on model lines. It has a hostel attached to it where the team-spirit is developed to a very high standard. There is an industrial school and it is hoped it will be developed to a Trades School in the near future. Great credit is due to the staff for the excellent training imparted to the pupils. The people of Walajabad are extremely fortunate in having the services of such selfless workers of the type of Messrs. W. T. Panchaksharam Mudaliar and Masilamani Mudaliar who are managing the school and I pray the Almighty will grant them long life and health to enable them to place the institution on a permanent footing financially.

J. RAMASWAMI,

28-12-34. Dy. Asst. Controller of Mily. Accounts, Poona

நான் இப்பாடசாலையை 28-12-34ல் பார்வையிட்டேன். அதன் அதிக திறமையுள்ள வேலைகளைக் கண்டு மகிழ்ந்தேன். பிறர் பின் பற்றும் வழியில் இப்பாடசாலை நடைபெறுகின்றது. இதைச் சேர்ந்து ஓர் விடுதியும் இருக்கின்றது. அங்கு மாணவர்களை நாட்டுக்கு உழைக்கும் நன்னிலையில் பழக்கிவந்திருக்கின்றார்கள். அங்கு ஓர் கைத்தொழிற்சாலையும் இருக்கின்றது. அது விரைவில் வியாபார சாலையாய் மிளிரும் என எண்ணுகின்றேன். மாணவர்களைத் தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் நன்னிலையில் பழக்குகின்றனர். தன் நலங் கருதாது இச்சிறந்த பாடசாலைக்கு உழைக்கும் திருவாளர்கள் வா. தி. பஞ்சாட்சர முதலியார், வா. தி. மாசிலாமணிமுதலியார் இவர்கள் இருப்பதால் வாலாஜாபாத் வாசிகள் பெருத்த அதிர்ஷ்டம் செய்தவர்களாவார்கள். பாடசாலை வளர்ச்சிக்குப் போதுமான நிலையான பொருளாதாரம் தேடிவைத்து நடத்தும்படி அவர்கள் நீண்ட நாட்களிருக்க நான் இறைவனை வேண்டுகின்றேன்.

J. ராமசாமி.

டெபுடி அஸிஸ்டெண்ட் கன்ட்ரோலர் ஆப் மிலிடரி அக்கௌண்ட்ஸ்.

---

இந்துமத பாடசாலையை இன்று பார்வையிட்டேன். ஆரம்ப வகுப்பு முதல் உயர் வகுப்பு வரை ஒவ்வொன்றையும் பார்வையிட்டதில் இப்பாடசாலை மாணவர்களின் திறமை ஆங்கிலம், கணக்கு, தமிழ் ஆகிய எல்லாப் பாடங்களிலும் சிறந்து விளங்குவதோடு மாணவர்கள் பிற்கால வாழ்விற்கு அவசியமான தறித்தொழில், தச்சுவேலை, கலாய் பூசுதல், தையல் வேலை முதலிய பல வித கைத்தொழில்களிலும் மிகவும் மேன்மையுற்று விளங்குகிறார்கள். மக்கள் வாழ்க்கைக்கு அவசியமான தொழில் வளர்ச்சியில் மிகுந்த கவனம் செலுத்தி வருவது இப்பாடசாலையின் தனிச் சிறப்பாக இருக்கிறது. மாணவர்கள் ஒழுக்கம், இசைப்பயிற்சி, பேசுந் திறமை, பொது நலசேவையில் ஆர்வங் கொள்ளல் ஆகிய எல்லா நற்குணங்களிலும் மேம்பட்டு விளங்குகிறார்கள். பாடசாலையைச் சார்ந்த வள்ளலார் மாணவர் விடுதி குருகுல முறையில் சிறப்பாக நடந்து வருவதும் மகிழ்ச்சிக் குரியது. இப்பாடசாலை பலவகை

யிலும் சிறந்து வளரவேண்டுமென பிரார்த்தித்து அதன் அபி விருத்திக்காக ரூபா 100/-நன் கொடையாக வழங்குகின்றேன்.

மாணவர்களின் நன்மையைக் கோரும்,

T. N. சபாபதி முதலியார்,
முனிஸிபல் வைஸ் சேர்மன்.
திருவாரூர் 4-2-35

1935 ஆண்டு பிப்ரவரி மாதம் 4 தேதி வாலாஜாபாத் இந்து மத பாடசாலையைப் பார்வை யிட்டேன்.

எல்லா ஜாதி மாணவர்களும் வாசிப்பது குறிப்பிடத் தக்கது. ஆதித்திராவிட மாணவர்களைக் கலந்துசரிசமமாகவே நடத்துகின்றார்கள். பெரிய புத்தகசாலையு மிருக்கின்றது. மாணவர்களும் ஆசிரியர்களும் உபயோகிப்பது மல்லாமல், வெளியூர் ஜனங்களுக்கும் வாசிக்கக் கொடுப்பது போற்றத் தக்கது. இலவச வாசகசாலையும் இருக்கின்றது. வள்ளலார் மாணவர் விடுதியிலுள்ள எல்லா வேலைகளையும் மாணவர்களே செய்து கொள்ளுவது மிகவும் பாராட்டத் தக்கது. விடுதி மாணவர்கள் சுத்தமாகவும், ஒழுங்காகவும், சந்தோஷமுள்ளவர்களாகவும் தோன்றினார்கள்.

6 வயதுடைய மாணவர்களும் அங்கே யிருப்பது போற்றக் கூடியது. ஆசிரியர்கள் உற்சாகத்துடன் வேலை செய்கிறார்கள். சுமார் 34 கிராமங்களிலுள்ள ஏழை மாணவர்கள் வந்து வாசிப்பதைக் காண மகிழ்ச்சி யுறுகின்றேன். பாடசாலைக்கு வருவாயோ குறைவு. ஆனால் செலவோ அதிகமாக இருக்கிறது. யான் பார்த்த வரையிலும் ஆதி திராவிடர்களுக்கு சம உரிமை கொடுத்து அவர்களை முன்னுக்குக் கொண்டுவரக் கூடிய பள்ளிக்கூடம் (இச்சென்னை மாகாணத்தில்) இது ஒன்றுதான் என்று நினைக்கின்றேன். இப்பாடசாலை மேன்மேலும் விருத்தியாகி தமிழ் நாட்டிற்குத் தக்க பலன் கொடுக்கு மென்பதற்கு ஐயமில்லை.

பெரி. ராஜ. நடராஜ முதலியார்,
Chairman, Mannargudi.

21-3-35ல் வாலாஜாபாத் பள்ளிக்கூடத்தைப் பார்த்ததில் முன்னோர்கள் காலத்தில் குருகுலவாச மென்பது ஞாபகத்திற்கு வருகிறது. பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதோடு பிற்கால வாழ்க்கைக் குரிய கைத்தொழிலும் கற்றுக் கொடுப்பது சாலச் சிறந்ததாயிருக்கிறது. இதற்குத் தக்க உதவியிருக்குமாகில் தலை சிறந்து விளங்கு மென்பதில் ஐயமில்லை. மரபினர்களும், இதர தனவந்தர்களும் தக்க உதவிபுரிந்து இந்த கலாசாலையை விர்த்தி செய்தால் ரொம்பவும் புண்ணியமுண்டு. தேவையான கட்டிடங்களில்லாமல் ஹாஸ்டலும், ஸ்கூலும் மிகவும் கஷ்டப்படுகிறது. கூடிய சீக்கிரம் எல்லாம் நிவர்த்தியாகி பூரண சௌக்கியத்துடன் நடந்தேற இறைவனை வேண்டுகின்றேன். இதற்கு சாசுவத சந்தாதாரனாக நன்கொடை ரூ 100/- நூறும், பிள்ளைகளுக்கு ஒரு நாள் சாப்பாடுபோட ரூ 50/ம் கொடுத்திருக்கின்றேன்.

V. S. செங்கோட்டையா
கோயம்புத்தூர்.

Visited this school this day. This is an ideal institution deserving all encouragements from the public. The feature in this school is that 117 Adi Dravidas are freely mixing with other children with the least difference. The work turned out by pupils in weaving, carpentry etc., is very appreciable.

T. SHUNMUGAM PILLAI,
Vice. President, Dt. Board,
Chingleput 18-4.35.

இன்று இப்பாடசாலையைப் பார்வையிட்டேன். இது பொது மக்கள் ஆதரவு பெறத்தக்க ஓர் சீரிய பாடசாலை. 117 ஆதிதிராவிட மாணவர்கள் பிற மாணவர்களோடு ஒரு வேற்றுமையு மில்லாது இதில் கலந்திருப்பதே இதன் எதிர்கால வளர்ச்சியைக் காட்டுகின்றது நெசவு, தச்சு வேலை முதலியவைகளில் மாணவர்கள் செய்யும் வேலைகள் போற்றத்தக்கன.

T சண்முகம் பிள்ளை,

I was taken round the school, the weaving and carpentry classes of the H R. School by Messrs. Panchaksharam, Masilamani Mudaliar and the Headmaster. I also saw thc students at play in the river bed behind the school. The selfless devotion of the management and the hearty co-operation of the staff is praiseworthy. It is gratifying to see that the Adi. Dravida children are treated with no distinction whatever. This sort of social service carried on in actual practice is worth congratulating. The hostel management is really democratic and teaches every child self-help. The management really deserves congratulation on their achievement and the patronage of the public for further development.

BHANDAREY
20.2.35.
Asst. Director of Agriculture, Cuddalore.

திருவாளர்கள் வா. தி. மாசிலாமணி, பஞ்சாட்சரம் ஆகியவர்களும் தலைமையாசிரியரும் இன்று பாடசாலையின் பல அங்கங்களையும் காட்டினர் ஆற்றில் விளையாடும் மாணவர்களையும் கண்டேன். சுயநலமற்ற தலைவர்களது பொறுப்பும் ஆசிரியர்களது ஒத்துழைப்பும் பெரிதும் போற்றத்தக்கன. ஆதிதிராவிட மாணவர்கள் யாதொரு வித்யாசமும் இல்லாது நடத்தப்படுகின்றனர். இத்தன்மையான சமூகத்தொண்டு உண்மையான முறையில் நடப்பது உயர்ந்ததாகும். விடுதியானது மாணவர்களாலும் ஆசிரியர்களாலுமே நடைபெறுகின்றது இப்பாடசாலை மேன்மேல் வளர்ச்சியுற பொது மக்களது உதவியும் போற்றலும் மிக அவசியம்.

பண்டாரி.

My visit to this useful institution a second time gives me immense pleasure to see the subsequent developements. The institution has grown wider and the teaching staff is greatly increasing. Messrs. W. T. Panchakshara Mudaliar and Masilamani Mudaliar are devoting their heart and

soul to the success of the institution besides donating a good deal of their income. The institution deserves public help. The authorities are contemplating to erect separate buildings for the school and the hostel and I request that philanthropic gentlemen should come forward to help the institution.

I find that the teaching is efficient. Great care is taken to see that the hostel boys are kept healthy and strong. I wish the institution every success.

K. NARAYANASWAMY MUDALIAR,
Dy. Registrar,
Vellore, 10-3-35.

இந்த உபயோகமுள்ள பாடசாலையை இரண்டாமுறை பார்வையிட்ட எனக்கு அதன் வளர்ச்சி பெரிதும் மகிழ்ச்சியைத் தருகின்றது. ஆசிரியர்களோடு பாடசாலையும் வளர்ச்சியுறுகின்றது. திருவாளர்கள் வா. தி. பஞ்சாட்சர முதலியாரும், வா. தி. மாசிலாமணி முதலியாரும் தங்கள் வருமானத்தின் பெரும்பகுதியை இப்பாடசாலையின் வளர்ச்சிக்கே செலவிடுவதோடு மனமொழி மெய்களெல்லாம் இப்பாடசாலையின் வளர்ச்சியிலேயே ஊன்றிக் கிடக்கின்றதென அறிகிறேன். பொதுஜன உதவி பெரிதும் இதற்கு வேண்டப்படுகின்றது. இதன் வளர்ச்சியாளர்கள் இப்பள்ளிக்கும் இத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் வள்ளலார் விடுதிக்கும் தனித்தனி கட்டடம் அமைக்க எண்ணியுள்ளார்கள். தயவாளர்கள் இதற்குத் தக்க உதவி செய்ய முந்த வேண்டும்.

ஆசிரியர்கள் திறமையான முறையில் கற்பிக்கின்றனர். விடுதி மாணவர்கள் சுகமாகவும் பலமுள்ளவர்களாயும் இருக்கத்தக்க பெருமுயற்சி எடுத்துக்கொள்ளப்படுகின்றது. இப்பாடசாலை மேன்மேல் வளரவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

கீ. நாராயணசாமி முதலியார்.
டெப்டி ரிஜிஸ்ட்ரார் வேலூர்.

The school gives instruction in a variety of subjects, besides mere literary education * * All are treated with equal kindness, irrespective of caste or creed * * * The idea underlying the whole arrangement is really praiseworthy and deserves to be adopted by all philanthropic gentlemen who are anxious to do good to mankind.

M. DWARAKANATHAN,
Tahsildar, Conjeeveram.
2-7-1935.

இலக்கியக்கல்வியேயன்றிவேறுபல விஷயங்களும் இந்தப்பாடசாலையில் போதிக்கப்படுகின்றனர் * * ஜாதிமதபேதமின்றி அனைவரும் ஒரேவிதமாக அன்புடன் நடத்தப்படுகிறார்கள் * * * இந்த எற்பாட்டின் அடிப்படையான நோக்கம் உண்மையிலேயே பாராட்டற்குரியதுமட்டு மன்றி மனிதசமூகத்துக்கு இதம்புரிய அவாவும் பொதுப்பணியில் ஆர்வமுள்ள கனவான்களால் பின்பற்றத் தக்கதுமாகும்.

எம். துவாரகநாதன்,
தாசில்தார், காஞ்சீபுரம்
2—7—1935

My best thanks are due to Messrs. Panchaksharam and Masilamani Mudaliar for taking me round the school and allowing me to see the children at work and play. The vision and the energy displayed by the management and the loyal devotion of the staff are producing excellent results. It is gratifying to note that the children of the so-called untouchable community as well as the children of the Muslims fully partcipate in every activity of the school and thus justify the true religious character of the institution. I wish we had more institutions of this type. But selfless leaders of the courage and vision of Mr.

Masilamani Mudaliar are rare in any country and far rare in our country at the present time. I trust that the school will grow from strength to strength and will be spared to spread light and culture in the land.

P. N. RAJAGOPAL NAIDU, M. A.
Dy. Accountant General,
29-9-35.

இன்று இப்பாடசாலையின் அங்கங்களையும் மாணவர்கள் பயிலும் முறை, விளையாடும் முறை, முதலியவைகளையும் காட்டிய திருவாளர்கள் வா. தி. பஞ்சாட்சர முதலியார், வா. தி. மாசிலாமணி முத்லியார் அவர்களுக்கு என் வணக்கம் உரியது. இதை இயக்குவிக்கும் இவர்களும் பாடசாலை ஆசிரியர்களும் நன்னிலையில் பாடசாலையைக்கொண்டு வந்திருக்கின்றனர். தாழ்த்தப்பட்ட வகுப்பார் என்று சொல்லப்பட்ட மாணவர்களும் மகம்மதிய மாணவர்களும் பாடசாலையின் எல்லா அங்கங்களிலும் ஒத்துப் பழகி வருவதன் மூலம் இப்பாடசாலையின் உண்மைச் சமயநோக்கம் ஈடேறுவது கண்டு பெரிதும் மகிழ்கிறேன். இதுமாதிரியான பாடசாலைகள் இன்னும்பல இருக்கவேண்டுமென விழைகின்றேன்.

ஆனால் தற்காலத்தில் மாசிலாமணி முதலியாரைப் போன்றசுய நலமற்ற தலைவர்கள் எந்நாட்டிலும் குறைவாயும் நம் நாட்டில் மிகக் குறைவாயும் காணப்படுகின்றனர். இப்பாடசாலை மேன் மேலும் வளர்ச்சியுற்று நாட்டிடை ஒளிவிட்டுத் திகழவேண்டுமென விழைகின்றேன்.

P. N. ராஜகோபால் நாயுடு,M.A.
டெபுடி அக்கௌண்டெண்ட் ஜெனரல்.

I freely endorse every word of above. I think it is really a model school to be copied at every village.

M. BASHYAM, B. A., B. L.
Deputy Assistant Controller of
Military Accounts.

மேலே கூறப்பட்டுள்ள ஒவ்வொரு வார்த்தையையும் சிறிதும் தயக்கமின்றி நான் ஆமோதிக்கிறேன். உண்மையிலேயே ஒவ்வொரு கிராமத்திலும் பின்பற்றத்தக்க ஒரு லக்ஷியமாக இந்தப் பாடசாலை விளங்குகிறதென நான் நினைக்கிறேன்.

எம். பாஷ்யம், பி.ஏ. பி.எல்.
Duputy Assistant Controller of
Military Accounts.

Visited the school this morning and found work in progress. Owing to continuous heavy rain the attendance is below average. The school is large and prosperous and the teachers are efficient. There is no distinction of caste or creed and the percentage of A. D's on the roll is very satisfactory. The school is well-run, clean and tidy. The whole place breathes efficiency and good education. I am well pleased with what I have seen and I wish the school continued success.

The Manager informs me that he wishes to start a hostel for A. D. boys, but that funds do not permit. It is a worthy object and if there is any provision under which a Govt. grant can be sanctioned for this purpose. I earnestly recommend it for consideration as this school serves some 30 or 40 surrounding villages.

ANDREWS SOUTHERN, I.C.S.
15-11-35 Sub-Collector, Chingleput

இன்று காலை இப்பாடசாலையைப் பார்வையிட்டு இது நன்றாக வேலை செய்கின்றதென அறிந்தேன். விடாமழை காரணமாக மாணவர் வருகை குறைந்து இருந்தது. பாடசாலை பெரிதாகவும் விளக்கமுடையதாகவும் இருப்பதோடு ஆசிரியர்களும் தகுதிவாய்ந்தவர்களாக இருக்கின்றனர். இதில் ஜாதிபேதம் என்பதே கிடையாது. ஆதித்திராவிடர்கள் அதிக மிருத்தல் திருப்தியே. பாடசாலை

ஒழுங்காகவும் சுத்தமாகவும் இருப்பதுடன் நன்றாகவும் நடத்தப்படுகின்றது. அதைச் சுற்றியுள்ள கிராமமெல்லாம் நல்ல கல்வியையும் நலத்தையும் அடைகின்றன. நான் பார்த்ததிலிருந்து மிகமகிழ்வடைந்ததோடு இது வெற்றியோடு ஓங்கவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

பாடசாலை ஆட்சியாளர் ஆதித்திராவிடர்களுக்குத் தனிவிடுதி ஏற்படுத்த வேண்டுமென்றும் ஆனால் அதற்குத்தக்க பணஉதவி இல்லையென்றும் கூறினார்கள். இதுஅவசியம் தேவையானதாகையால் வசதியிருந்தால் அரசாங்கம் இதற்குத் தக்க உதவிசெய்ய வேண்டும். 30 அல்லது 40 சுற்றுக் கிராம மாணவர்கள் பயிலும் இப்பள்ளிக்குத் தக்க உதவி வேண்டியதென நான் சிபார்சு செய்கின்றேன்.

ஆண்ட்ரூஸ் சதர்ண் ஐ. ஸி. எஸ்.

This would require a large funded capital which I trust will be forthcoming at the hands of the generous public. Both the school and the Hostel are maintained in peculiar way, namely, out of the commission received from the insurance business done by the correspondent of the school and I hope larger number of people would come forward to get themselves insured to have the benefit of insurance and also to indirectly provide the school and hostel with funds.

P, O, SIVARAM,
Incometax Officer, Conjeeveram,
10-8-35.

இதற்கு ஒரு பெரிய மூலநிதி அவசியமாகும் அதனை தயாள சிந்தையுடைய பொதுமக்கள் வழங்குவார்களென நம்புகிறேன். பாடசாலை, மாணவர் விடுதி ஆகிய இரண்டும் ஒரு தனிப்பட்ட முறையில் நடத்தப்படுகின்றன. பாடசாலையார் செய்து வரும் இன்ஷூரன்ஸ் தொழில் மூலமாகக் கிடைக்கும் கமிஷன் தொகையைக் கொண்டு இவை நடத்தப்படுகின்றன. ஆகவே, இன்னும் பலர் தங்கள் ஆயுளை இன்ஷூர் செய்து கொண்டு அதன்மூலமாகத் தாங்

கள் பயன் பெறுவதோடு பாடசாலைக்கும் மாணவர் விடுதிக்கும் வேண்டிய பொருள் கிடைப்பதற்கும் உதவியாயிருக்க முன் வருவார்களென்று நம்புகிறேன்.

பி. ஓ. சிவராம்,
வருமான வரி உத்தியோகஸ்தர்
10—8—35.

---

The increase in the number of pupils is eloquent testimony to the very valuable work rendered by the Mudaliar Brothers to that institution.

One distinctive feature is the large element of Adi Dravida Boys in the institution who are admitted on terms of absolute equality and many of them get a hearty mid-day meal.

The display of physical skill, the recitations, the dramatisation of moral teachings and the histrionic and musical talent displayed by the boys without any sort of forewarning speak highly of the skill and care of the teaching staff.

The moral fervour of the staff and of the boys was another characteristic feature about the school.

The hostel is a model which could be commended heartily for imitation all over the country.

V. NATESAN, Military Accounts
Department (on leave) 17-11-35.

மாணவர்களின் தொகை முன்னிலும் அதிகரித்திருப்பதே முதலியார் சகோதரர்கள் இந்தஸ்தாபனம் சம்பந்தமாகச் செய்து வரும் ஒப்பற்ற பணிக்குச் சிறந்த சான்றாகும்.

இப்பாடசாலையில் ஆதிதிராவிடப் பிள்ளைகள் பெருந்தொகையினராகச் சேர்ந்திருப்பது இதிலுள்ள ஒரு விசேஷமான அம்சமாகும். அவர்கள் மற்றவர்களோடு முற்றிலும் சமமாகவே கருதப்

படுகிறார்கள். அவர்களுள் பலருக்குத் திருப்தியான பகல் உணவு கிடைக்கிறது.

தேகாப்பியாசம், பாடல் பயிலல், சன்மார்க்க போதனைகளை நடித்துக் காட்டல், ஆகியவைகளிலும் சங்கீதம் முதலிய கலைப் பயிற்சிகளிலும் எச்சரிக்கைக்குச் சிறிதும் அவசியமில்லாதவாறு மாணவர்கள் காட்டுந் திறமை ஆசிரியர்களின் திறனையும் ஊக்கத்தையும் நன்கு விளக்குகிறது.

ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் ஒழுக்க மேம்பாட்டிலுள்ள ஆர்வம் இப்பாடசாலையின் மற்றொரு விசேஷ அம்சமாகும்.

மாணவர் விடுதி இத்தேசமெங்குமே பின்பற்றும்படி முழுமனதுடன் சிபார்சு செய்யத் தக்க வகையில் ஓரிலக்காக விளங்குகிறது.

வி. நடேசன், M. A.

We are greatly impressed with the many social activities of the boys * * and request the public to help a cause which is so deserving.

L. S. KARAYALAR, Advocate, Madras.
M. APPADURAI Pillai, President, D. E. C. Chingleput.
E. M. Gopalakrishna Kone, Bookseller, Madura.

மாணவர்களது பல திறப்பட்ட வேலைகளும் எங்கள் மனதைக் கவர்ந்தன * * இவ்வளவு தகுதிவாய்ந்த இச்சாதனத்துக்கு உதவி புரியுமாறு பொது மக்களை வேண்டுகிறோம்.

எல். எஸ். கரையாளர்,
M. அப்பாதுரை பிள்ளை, D. E. C. செங்கல்பட்டு.
E. M. கோபாலகிருஷ்ண கோன், புத்தக வியாபாரம், மதுரை.

One thing that struck me was that while the name of the school suggests that the school was purely sectarian and confined only to the Hindus, inreality, it was open to the students of other creeds as well. * " I particularly appreciate their system of spreading education amongst the non-students of the neighbouring villagers by sending

out books for distribution and later collecting through their students.

This is a model of self-help sustained by the optimistic and benevolent efforts of a few gentlemen.

B. S. RAMASWAMI AIYAR, B A., B. E., A. M. I. E.,
Executive Engineer, Chingleput Division.
18-11-35.

நான்கண்ட ஒரு விசேஷம் என்னவெனில், பெயரிலிருந்து இப்பாடசாலை ஒரு மதச்சார்பு உடையதென்றும் ஹிந்துக்களுக்கே உரியதென்றும் தோன்றினும் உண்மையில் மற்ற மதத்தார்களும் இதில் தாராளமாகச் சேரலாம் என்பதே * * மாணவர்கள் மூலம் புத்தகங்களைக் கொடுத்தனுப்பித் திரும்பப் பெற்றுக்கொள்ளும் முறையில் மாணவர்களல்லாதவர்களிடையும் சுற்றுப் புறங்களிலுள்ள கிராமவாசிகளிடையும் கல்வியைப் பரப்பச்செய்யப்பட்டிருக்கும் ஏற்பாட்டை நான் விசேஷமாகப் பாராட்டுகிறேன்.

சில கனவான்களது தளராள திடசித்தத்தையும் தயாள சிந்தையையும் ஆதாரமாகக் கொண்டு நடத்தப்படும் இப்பாடசாலை தன்கையே தனக்குதவி என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

பி. எஸ். ராமசாமி அய்யர்.

The Hindu Matha Higher Elementary School is unique in the sense that it is one of the very few Hindu managed institutions of South India, at any rate in our Presidency.

It would appear as though they (the managers) were wedded to the institution, that their "life and soul" were centred in the philanthrophic work.

The importance of the residential aspect can hardly be exaggerated. Such a system will help to convey the pupils moral discipline, a high sense of honour and responsibility and the formation of character. The 2nd

striking feature of the school is the lending library by which books are made to reach the villagers through the students.

A real vocational basis is given to the 'formal and literary education. Nor is the physical development of the children neglected.

Miss. P. P. NAIDU,

*Sub-Assistant Inspectress of Schools, Saidapet*

பார்ப்பவர்களுக்கு இதை நடத்துபவர்கள் இந்தஸ்தாபனத்துக்கே வாழ்க்கைப் பட்டவர்களோ என்றும் தோன்றும்; அவர்களது உடல் பொருளாவியெல்லாம் இப்பொதுப் பணிக்கே அர்ப்பணமோ என்றுந் தோன்றும்.

அல்லது நமது ராஜதானியிலே தென்னிந்தியாவிலே ஹிந்துக்களால் நடத்தப்படும் மிகச் சில ஸ்தாபனங்களுள் ஒன்று என்பதால் ஹிந்துமத பாடசாலை உன்னதமானதாகும்.

மாணவர்கள் பள்ளியிலேயே தங்கியிருப்பது எவ்வளவு முக்கியமான தென்பதைப் பற்றி பல கூறினும் மிகையாகாது. மாணவர்களிடையில் ஒழுக்கக் கட்டுப்பாடும் ஒரு கண்ணியமான உணர்ச்சியும் பொறுப்பையுணரும் தன்மையும் நற்குணமும் வளருவதற்கு இம்முறை பெரிதும் உதவியாயிருக்கும். இப்பாடசாலையில் மற்றொரு முக்கியமான அம்சமென்னவெனில், மாணவர் மூலம் புத்தகங்கள் கிராமவாசிகளுக்குக் கிடைக்கக் கூடிய ஏற்பாட்டுடன் அமைக்கப்பட்டுள்ள புத்தகசாலை ஒன்று இப்பாடசாலையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இலக்கியக் கல்வியேயன்றி வேறுபல விஷயங்களும் இந்தப்பாடசாலையில் போதிக்கப்படுகின்றன.

இங்கே உள்ள இலக்கியக்கல்விக்குத் தொழிற் பயிற்சியொன்றும் உண்மையான ஆதாரமளிக்கப்படுகிறது. குழந்தைகளின் சரீர வளர்ச்சியும் இங்கே கவனிக்கப்படாமலில்லை.

மிஸ் பி. பி. நாயுடு, M. A. L. T.

General remarks:— The general condition of the school continues to be as satisfactory as before with the addition of certain improvements as mentioned above in the right direction. The strength has improved since last year and additional accommodation has also been secured. A building with spacious grounds has been acquired for the hostel. About ten teachers are residents there along with a hundred pupils and a sort of tutorial system is being developed therein. The enlightened interest evinced by the management in the care of the children is evidenced by the fact that about sixty poor adidravida pupils of the school are given free midday meals. This is a move in the right direction and the management deserves all praise for the same. The management has supplied during the year, slates for the poor children of the school for use during School hours. This is an attempt at solving the difficult problem of bringing rural children of poor parents under instruction and retaining them for some time in the school. That nearly half the pupils who attend the school come from many villages within a radius of six miles is a proof sufficient of the fact that the school is very popular and that it has captured the imagination of the surrounding rural population The management is alive to the needs of New Education and are untiring in their efforts to introduce new methods of instruction. There is hearty co-operation between the staff and the management on all matters relating to the school. In short, the management and staff are attempting to impart right type of rural Education sparing neither effort nor expenditure with a very fair amount of success. The management and staff deserve all appreciation for the good work turned out during the year.

V. K. SESHADRI AYYANGAR, B. A., L. T.,

Junior Deputy Inspector of Schools,

23-11-35

Conjeeveram Range.

## 1935-ம் வருஷத்திய இன்ஸ்பெக்ஷன் ரிபோர்ட்டின் சாராம்சம்.

போதுகுறிப்புக்கள்:— பொதுவிலே இப்பாடசாலையின் நிலைமை முன்போலவே திருப்திகரமாக இருக்கிறது. மேலே கண்டபடி சில விஷயங்களில் சரியான வழியிலே அபிவிருத்தியும் காணப்படுகிறது. சென்ற வருஷத்திலிருந்ததைவிட இப்போது அதிக மாணவர்கள் இருக்கிறார்கள், அவர்களுக்கு வேண்டிய இடவசதியும் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது: மாணவர் விடுதிக்காக பெரிய தொரு தோட்டத் தோடு சேர்ந்த கட்டடம் ஒன்றை வாங்கியிருக்கிறார்கள், சுமார்பத்து ஆசிரியர்களும் நூறு மாணவர்களும் அங்கே தங்கியிருக்கிறார்கள்: ஆசிரியரும் மாணவர்களும் நெருங்கிப் பழகிப் பயிலும் ஒருவித போதனுமுறையை இங்கே வளர்த்து வருகிறார்கள். ஏழை ஆதித்திராவிட மாணவர்களுக்கு இலவசமாகப் பகற் போஜனம் அளித்து வரப்படுவதிலிருந்தே இதை நடத்துபவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்படும் சிறுவர்கள் நன்மையைப் பற்றி எவ்வளவு திற மையான முறையிலே அக்கறை எடுத்துக் கொள்ளுகிறார் கள் என்பது விளங்குகிறது. இது சரியான மார்க்கத்தில் செல் வதற்குரிய குறியாகும். இது சம்மந்தமான பாராட்டு அனைத்தும் இதை நடத்துபவர்களுக் குரியதாகும். இவ்வருஷத்தில், பாடசாலை நேரத்தில் உபயோகித்துக் கொள்வதற்காக ஏழை மாணவர்களுக்கு அவர்கள் எழுது பலகைகள் கொடுத்துள்ளார்கள். கிராமத்தார்களி லுள்ள ஏழை மக்களின் குழந்தைகளைக் கல்வி பெறும்படி செய்வதி லும் அவர்களைச் சிறிதுகாலம் பாடசாலையில் நிறுத்தி வைப்பதிலும் உள்ள கஷ்டத்தைத் தீர்ப்பதற்கு இது ஒரு நன் முயற்சியாகும். பாடசாலையில் பயிலும் மாணவர்களில் ஏறக்குறைய பாதிபேர் ஆறு மைல் தூரத்துக்குப் பரவிக்கிடக்கும் அனேக கிராமங்களிலிருந்து வருகிறார்களென்பதே இதுமிகவும் பிரசித்தி பெற்றிருக்கின்றதென்ப தற்கும் சுற்றுப்புறத்திலுள்ள கிராமவாசிகளின் மனத்தைக் கவர்ந் திருக்கிறதென்பதற்கும் போதிய சான்றாகும். நவீனகல்வியின் அவசியங்களை இதை நடத்துபவர்கள் நன்கு உணர்ந்திருக்கிறார் கள். ஆகவே புதியபோதனு முறைகளைப் கையாளும் வகையில் அவர் கள் தளரா உழைப் பெடுத்துக் கொள்ளுகிறார்கள். பாடசாலை சம் பந்தமான எல்லாவிஷயங்களிலும் அதிகாரிகளும் ஆசிரியர்களும்

பூரணமாக ஒத்துழைக்கிறார்கள்: சுருங்கக்கூறின், சரியானதொரு கிராமாந்தரக் கல்வியைப் போதிப்பதற்காக இவ்விருதரத்தாரும் உடலுழைப்பை மேற்கொள்ளவோ பொருட்செலவைத் தாங்கவோ சளைக்காது முயன்று வருகிறார்கள். அம்முயற்சி பெரிதும் சித்திகரமாகவே இருக்கிறது. இவ்வருஷத்தில் நடந்துள்ள சிறந்த வேலைக்காக அதிகாரிகளும் ஆசிரியர்களும் எல்லாவகையிலும் பாராட்டுதற்குரியவர்களாவார்கள்:

வி. கே. சேஷாத்திரி அய்யங்கார், பி. ஏ., எல். டி.,
பாடசாலைகளின் ஜூனியர் டெப்டி இன்ஸ்பெக்டர்,
காஞ்சீபுரம் பிரிவு

---

## நன்றிகூறல்.

இப்பாடசாலை வளர்ச்சியை எல்லா வழியிலும் கருதி முன்னுக்குக் கொண்டுவர முன்னின்ற பெரியார்கள் யாவருக்கும் எம் நன்றி உரித்தாகுக. உயிர் ஒப்பந்த நிதியில் பாலிசி எடுத்தும், பிறரை எடுக்கச் செய்தும், பொருளினோ டமையாது உடலாலும், மனதாலும் பலவேறு வகையில் தொண்டாற்றிய பெரியோர்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். அன்னார் இவ்வுலகில் பெறற்கரிய பெரும் பேறெய்தி, இன்னலம் பலவும் துய்த்து, பன்னாள் வாழ்ந்து, மேன்மேலும் ஏழைகட் கிரங்கி, இன்பத்தை அனுபவித்துத் திகழவேண்டுமென விண்ணும் மண்ணும் படைத்த பண்ணவன் மலரடிப் பரவுதும் யாமே.



# இணைப்புகள்

பாடசாலையின் ஆண்டுதோறும் வளர்ச்சியைக்காட்டும் 'அறிக்கை—

| வருஷம் | வகுப்பு | மாணவர்கள் | ஆசிரியர்கள் | அரசாங்க நன்கொடை | செலவு |
|---|---|---|---|---|---|
| 1916 | 1,2 | 4 ஆரம்பம் 44 | 2 | — | 40 |
| 1917 | 3 | 120 | 5 | 66 | 196 |
| 1918 | 4 | 146 | 5 | 195. | 380 |
| 1919 | 5 | 136 | 6 | 327 | 656 |
| 1920 | 5 | 189 | 6 | 401 | 885 |
| 1921 | 5 | 176 | 6 | 480 | 1267 |
| 1922 | 6 | 160 | 9 | 604 | 1422 |
| 1923 | 7 | 161 | 12 | 796 | 2264 |
| 1934 | 8 | 189 | 13 | 1169 | 2985 |
| 1925 | 8 | 222 | 14 | 1675 | 3407 |
| 1926 | 8 | 202 | 14 | 2311 | 3487 |
| 1927 | 8 | 211 | 14 | 2925 | 4244 |
| 1928 | 8 | 205 | 14 | 2718 | 5082 |
| 1929 | 8 | 242 | 16 | 3165 | 5668 |
| 1930 | 8 | 263 | 16 | 4112 | 5724 |
| 1931 | 8 | 320 | 15 | 3949 | 5012 |
| 1932 | 8 | 351 | 17 | 3386 | 4402 |
| 1933 | 8 | 422 | 19 | 3[illegible]43 | 5384 |
| 1934 | 8 | 54[illegible] | 30 | 3396 | 6485 |
| 1935 | 8 | 579 | 34 | 3756 | 6730 |

| வகுப்பு வகை | எண் | வகுப்பு வகை | எண் |
|---|---|---|---|
| 1. பிராமணர் | 11 | 5. கிருஸ்தவர் | 17 |
| 2. பிராமணரல்லாதார் | 408 | 6. மகம்மதியர் | 16 |
| 2 ஜைனர் | 3 | 7. ஆதித்திராவிடர் | 123 |
| 4 பௌத்தர் | 1 | மொத்தம் | 579 |

பாடசாலைக்குவரும் மாணவர்களின் உறைவிடங்கள்—

| | | மைல். | மாணவர் | | | மைல். | மாணவர் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | வாலாஜாபாத் | — | 193 | 18. | ஆசூர் | 3 | 7 |
| 2. | வெள்ளேரியம்மான் கோயில் | 1 | 12 | 19. | அகரம் | 6 | 6 |
| 3. | பிள்ளையார் குப்பம் | 3 | 3 | 20. | பூசிவாக்கம் | 3 | 2 |
| 4. | ஆறுமுகம் பேட்டை | 1 | 1 | 21. | நத்தாநல்லூர் | 3 | 2 |
| 5. | ஆயர்பாடி | 1 | 6 | 22. | ஊத்துக்காடு | 3 | 30 |
| 6. | சேரிக்காடு | 1 | 37 | 33. | பழையசீவரம் | 3½ | 14 |
| 7. | கன்னடங்குடிசை | 1 | 11 | 24. | கட்டவாக்கம் | 3½ | 16 |
| 8. | வல்லப்பாக்கம் | 1½ | 8 | 25. | பூதேரி | 3½ | 5 |
| 9. | புளியம்பாக்கம் | 1½ | 20 | 26. | தேவரியம்பாக்கம் | 4 | 4 |
| 10. | அங்கம்பாக்கம் | 1½ | 25 | 27. | நாய்க்கன்பேட்டை | 4 | 1 |
| 11. | வெண்குடி | 1½ | 31 | 28. | சிறுமயிலூர் | 6 | 1 |
| 12, | ஒட்டந்தாங்கல் | 4 | 2 | 29. | நாய்க்கன்குப்பம் | 4½ | 2 |
| 13 | அவளூர் | 2 | 5 | 30. | செம்மெலி | 4 | 2 |
| 14. | கம்மராஜிபுரம் | 3½ | 5 | 31. | வரதாபுரம் | 5 | 1 |
| 15. | ஒட்டிவாக்கம் | 2½ | 12 | 32. | வாரணவாசி | 6 | 5 |
| 16. | கிதிரிப்பேட்டை | 2½ | 12 | 33. | அளவூர் | 6 | 1 |
| 17. | குப்பம் | 3 | 1 | 34. | ஆம்பாக்கம் | 6½ | 1 |

செங்கற்பட்டு, மதுரை, தென்ஆற்காடு, வடஆற்காடு, தஞ்சாவூர், மதுரை ஆகிய ஜில்லாக்களிலிருந்து விடுதியில் உறையும் மாணவர். 95.

ஆக மொத்தம் 579

பாடசாலையின் சார்பாகவுள்ள—

## இலவச வாசகசாலைக்கு வரும் வெளியீடுகள்

1. தினமணி
2. தமிழ் நாடு
3. விடுதலை
4. லோகோபகாரி
5. குடியரசு
6. ஆனந்தவிகடன்
7. சுதந்திரச் சங்கு
8. சுதேசமித்திரன்
9. கலியுகம்
10. கலாநிலையம்
11. செங்குந்த மித்திரன்
12. தமிழரசு
13. பாரதி
14. செந்தமிழ்ச்செல்வி
15. கலைமகள்
16. பாரதஜோதி
17. ஆனந்த போதினி
18. அமிர்தகுணபோதினி
19. விநோதன்
20. ஆரம்பக் கல்வி

21. விசித்திரன்
22. பிரசண்ட விகடன்
23. ஊழியன்
24. நகரதூதன்
25. குமார விகடன்
26. சித்தாந்தம்
27. ஆரோக்கிய தீபிகை
28. ஆரோக்கிய தூதிகை
29. ஜீவரக்ஷகன்
30. இந்தியத்தாய்
31. இராமகிருஷ்ண விஜயம்
32. மணிமாலை
33. லக்ஷ்மி
34. தமிழ்மணி
35. மணிக்கொடி
36. Hindu
37. My Magazine
38. Funny Magazine
39. Merry Magazine
40. Industry

---

## வடலூர் வள்ளலார் மாணவர் விடுதி
## கால அட்டவணை.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | துயில் நீத்தல் | ... | ... | 5 : 0 |
| 2 | கடவுள் வணக்கம் | ... | காலை | 5 : 0—5 : 15 |
| 3 | காலைக்கடன் முடித்தல் | ... | ... | 5 : 15—5 : 30 |
| 4 | உடற்பயிற்சி | ... | ... | 5 : 30—5 : 45 |
| 5 | நீராடுதல் | ... | ... | 5 : 45—6 : 30 |
| 6 | கற்றல் | ... | ... | 6 : 30—8 : 0 |
| 7 | காலை உணவு | ... | ... | 8 : 0—8 : 45 |
| 8 | பள்ளி நேரம் | ... | ... | 9 : 0–12 : 0 |
| 9 | நண்பகல் உணவு | ... | ... | 12 : 15—1 : 15 |
| 10 | பள்ளிநேரம் | ... | ... | 1 : 30—4 : 30 |
| 11 | தோட்டவேலையும் விளையாட்டும் | | ... | 4 : 45—6 : 0 |
| 12 | கடவுள் வணக்கம் | ... | மாலை | 6 : 0—6 : 15 |
| 13 | இரவு உணவு | ... | .... | 6 : 15—7 : 0 |
| 14 | கற்றல் | ... | ... | 7 : 0—9 : 0 |
| 16 | துயிலச் செல்லல் | ... | இரவு | 9 : 0 |

N. நமசிவாயன்
விடுதி காப்பாளன்

## நன்கொடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | மங்கலம் திருவாளர் M. N. துரைசாமி முதலியார் | ...100 | 0 | 0 |
| 2. | மேட்டுப்பாளையம் திரு. V. ஆதிமூலம் முதலியார் | ... 4 | 0 | 0 |
| 3. | திருச்சி திரு. S. கனகசபாபதி பிள்ளை | ... 10 | 0 | 0 |
| 4. | M.R.Ry., S. Kamath Avl., Editor Sunday Times | 5 | 0 | 0 |
| 5. | ஷாப் திரு. W. R. நடராஜ முதலியார்(புத்தககமிஷன் மூலம்) | 0 | 9 | 10 |
| 6. | திரு, கண்ணுசாமி செட்டியார் வாலாஜாபாக் மாதச்சந்தா மூலம் | ... 0 | 7 | 6 |
| 7. | மிசிரி மல் சௌகார் வாலாஜாபாத் | ... 0 | 6 | 6 |
| 8. | புதுச்சேரி திரு. A. V. முத்தய்ய முதலியார் | ... 10 | 0 | 0 |
| 9. | திருவாரூர் திரு. T. N. சபாபதி வள்ளலார் Vice Chairman Tiruvarur | ...100 | 0 | 0 |
| 10. | தக்கோலம் திரு. A. R. செல்லப்பா முதலியார் | ... 25 | 0 | 0 |
| 11. | கீழ்ப் பெண்ணுத்தூர் சப்ரிஜிஸ்தரார் திரு. P. N. ஸ்ரீநிவாசலு நாயுடு | ... 2 | 0 | |
| 12. | குமரன் அச்சுக்கூடம் திரு. D. குப்புசாமி முதலியார் ஆர்டர் ஒன்றுக்கு 0-0-3 வீதம் கொடுத்தது | ... 35 | 3 | 0 |
| 13. | கோயம்பத்தூர் திரு V. S. செங்கோட்டையா &Bros., | ...100 | 0 | 0 |
| 14. | திரு. A. T. நடேச முதலியார் (பெங்களூர்) பள்ளிக்கூடத்திற்குத் தருந்த உலோகச் சாமான்களை விற்று வந்த தொகை வரவு | ... 9 | 5 | 0 |
| 15. | ஐக்கிய நாணயச்சங்கம் ஆரூர் (திரு. K. நாராயணசாமி முதலியார் Dy., Registrar of Co-operative Societies Tanjore) மூலம் | ...150 | 0 | 0 |
| 16. | மஞ்சகொல்லை திரு. இராஜகோபால முதலியார் (வியாபாரம்) பள்ளிச்சாலைக்கு ஜீவிய சந்தா ரூ. 100 தந்துவிடுவதாக ஒப்புக்கொண்டதற்கு 34-35 வருஷ வட்டி வரவு | ... 6 | 0 | 0 |
| | ஆகமொத்தம் | ...557 | 15 | 10 |

### இதர நன்கொடை.

1. பெங்களூர் திரு. A.T. நடேச முதலியார் Garrison Engineer's Office Bangalore அவர்கள் ரூ. 100 பெறுமானமுள்ள 20 தென்னங்கன்றுகள் அடங்கிய 16 செண்ட் பரப்புள்ள மனையை பள்ளிச்சாலையின் உபயோகத்திற்குத் தானமாக வழங்கியுள்ளார்.

ஐயங்கார்குளம் திருவாளர் லக்ஷ்மண முதலியார் அவர்கள் உதவிய தையல் மிஷின் ஒன்று. விலை ரூ. 30 0 0.

காஞ்சீபுரம் பிரபல வியாபாரியாகிய திருவாளர் கோட்டராம்பாளையம் A.K.தங்கவேலு முதலியார் அவர்கள் கைத் தொழிற்சாலைக்கு ரூ. 250 மதிப்புள்ள உயர்ந்த பேட்டு மெஷின் தறி ஒன்று அளித்துள்ளார்கள்.

1934-வ௵ ஏப்ரல் முதல் 1935-வ௵ மார்ச்சுமுடிய

# வாலாஜாபாத், இந்து மத பாடசாலையின் வரவு செலவு விவரம்

| வரவு விவரம் | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. அரசாங்க திரவிய சகாயம் ... | 3,756 | 11 | 0 |
| 2. மாணவர் சம்பளம் ... | 275 | 15 | 3 |
| 3. உண்டி வசூல் ... | 28 | 13 | 8 |
| 4. புத்தகசாலை, விளையாட்டுகள் கட்டணம் வரவு மாணவர்கள் மூலம் ... | 11 | 0 | 0 |
| 5. வாசகசாலை வரவு ஆசிரியர்கள் மூலம் ... | 37 | 2 | 6 |
| 6. மாணவர் விடுதி ... | 906 | 0 | 0 |
| 7. இதர நன்கொடை வரவு ... | 557 | 15 | 10 |
| ஆக கூடுதல் | 5,573 | 10 | 3 |
| 8. குறைவுக்காக நன் கொடையாக திரு. வா. தி. பாஞ்சாசூர முதலியார் அவர்கள் உதவியது ... | 3850 | 13 | 3 |
| | 9,424 | 7 | 6 |

| செலவு | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|
| 1. ஆசிரியர் சம்பளமும் தெய்வீகநிதிச் செலவும் ... | 5,318 | 0 | 5 |
| 2. வாசகசாலை பத்திரிகைகள் வரவழிக்க... | 74 | 9 | 3 |
| 3. நூற்குழுமத்திற்குப் புத்தகங்கள் வாங்கினது ... | 164 | 6 | 6 |
| 4. சில்லரைச் செலவு (Contingent) ... | 250 | 0 | 9 |
| 5. போதனு உபகரணங்கள் வாங்கியது ... | 12 | 9 | 6 |
| 6. தொழிற்சாலை, நெசவுச்சாலை, (2) தச்சுச்சாலை (3) புத்தகங்கட்டுதல் (4) சாயம் பூசுதல் (5) தையற்சாலை முதலியவைகட்கு ... | 386 | 10 | 0 |
| 7. கட்டடங்கள் பழுதுபார்த்த செலவு ... | 280 | 1 | 5 |
| 8. தபால் செலவு ... | 81 | 0 | 9 |
| 9. ஏழை மாணவர்களுக்குப் புத்தகம் ... | 65 | 14 | 0 |
| 10. வரிச்செலவு ... | 9 | 12 | 0 |
| 11. சாரணரியக்கச் செலவு ... | 15 | 3 | 0 |
| 12. மாணவர் விடுதிச் செலவு ... | 2,432 | 6 | 2 |
| 13. அச்சுக்கூலி ... | 71 | 9 | 9 |
| 14. தோட்டச் செலவு ... | 262 | 4 | 0 |
| | 9,424 | 7 | 6 |

# பள்ளியின் பல்வேறு அலுவல்கள்

## கண்காணிக்கும் ஆசிரியர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | நூற்குழுமம் | திரு. | N. P. தணிகைராயன் |
| | | ,, | C. V. ராமாநுஜம் |
| 2. | பாடசாலைத் தோட்டம் | ,, | T. K. ஸ்ரீரங்காச்சாரியார் |
| 3. | வாசக சாலை | ,, | U. S. சீனிவாச ஐயர் |
| | | ,, | மகமத் அசன் சாயபு |
| 4. | சம்பள வசூல் | ,, | V. T. ராஜகோபாலன் |
| 5. | கடிதப் போக்கு வரத்து | ,, | V. T. ராஜகோபாலன் |
| 6. | வரவு செலவு கணக்கு | ,, | W. R. நடராஜன் |
| 7. | மாணவர் வருகை கவனிப்பு | ,, | V. சந்தி நாயகர் |
| | | ,, | S. வைத்தியநாத முதலியார் |
| 8. | விழா ஏற்பாடு செய்தல் | ,, | V. T. ராஜகோபால ஐயங்கார் |
| | | ,, | வித்வான் சுந்தரனார் |
| | | ,, | V. சந்தி நாயகர் |
| | | ,, | S. வைத்தியநாத முதலியார் |
| | | ,, | G. சோமசுந்தரம் |
| | | ,, | S. விஸ்வநாதன் |
| 9. | பத்திரிகை நிருபர் தமிழ் | ,, | வித்வான் சுந்தரனார் |
| | | ,, | தேவராஜன் |
| | ஆங்கிலம் | ,, | K. வெங்கட்ராம நாயுடு |
| | | ,, | G. சோமசுந்தரன் |
| 10. | மாணவர் கழகம் | | |
| | (i) முதியோர் | | |
| | ஆங்கிலம் | ,, | G. சோமசுந்தரம் |
| | | ,, | K. வெங்கட்ராம நாயுடு |
| | தமிழ் | ,, | வித்வான் சுந்தரனார் |
| | | ,, | S. விஸ்வநாதன் |
| | | ,, | N. P. தணிகைராயன் |
| | (ii) இளைஞர் | | |
| | தமிழ் | ,, | S. விஸ்வநாதன் |
| | | ,, | தேவராஜன் |
| | | ,, | W. R. நடராஜ முதலியார் |

| | | | |
|---|---|---|---|
| 11. | சுந்தரானந்த நிலயம் இசைப்பாட்டு | ,, | S. விஸ்வநாதன் |
| | | ,, | V. கண்ணப்ப முதலியார் |
| | | ,, | B. நடராஜம் பிள்ளை |
| 12. | சாரண இயக்கம் | ,, | A. S. முருகேசம் |
| | | ,, | G. சோமசுந்தரம் |
| | | ,, | K. வெங்கட்ராம நாயுடு |
| 13. | இளஞ்சாரணர் | ,, | C. துரைராஜன் |
| | | ,, | A. N. சம்பந்தன் |
| 14. | விளையாட்டும் உடற் பயிற்சியும் | ,, | C. துரைராஜன் |
| | | ,, | N. P. தணிகைராயன் |
| | | ,, | G. சோமசுந்தரம் |
| | | ,, | K. வெங்கட்ராம நாயுடு |
| 15. | பொருட்காட்சி சாலை | ,, | K. K. ஏகாம்பரநாத ஐயர் |
| 16. | உலாவிக் கற்றல் | ,, | A. S. முருகேசம் |
| | | ,, | K. K. ஏகாம்பரநாத ஐயர் |
| | | ,, | K. வெங்கட்ராம நாயுடு |
| | | ,, | G. சோமசுந்தரம் |
| 17. | கைத் தொழிற்சாலை | ,, | T. ராஜவேலு முதலியார் |
| | | ,, | அருள் நாதன் |
| | | ,, | சிதம்பர முதலியார் |
| | | ,, | மகமத் ஆசன் சாயபு |
| | | ,, | திருவேங்கட நாயனர் |
| 18. | சிறுவர் நீதி மன்றம் | ,, | T. K. ஸ்ரீரங்காச்சாரியார் |
| 19. | விடுதி காப்பாளர் | ,, | N. நமச்சிவாயன் |
| 20. | பொருட்காப்பாளர் | ,, | W. K. நடராஜ முதலியார் |
| 21. | நாடகமன்றம் | ,, | S. விசுவநாதன் |
| 22. | தேரையர் மருந்தகம் | ,, | C. துரைராஜன் |
| 23. | பயிர்ப்பண்ணை | ,, | V. சந்தி நாயகர் |

# பார்வையிட்ட அறிஞரில் சிலர்.

1. V. வேணுகோபால் செட்டியார் I. C. S. ஜில்லாஜட்ஜி செங்கல்பட்டு.
2. சர். P. தியாகராய செட்டியார் B. A. சென்னை நகராண்மைக் கழகத் தலைவர், சென்னை.
3. திவான்பகதூர். C. அருணாசலமுதலியார், ஜமீன்தாரர், சூணம்பேடு.
4. திவான்பகதூர். W. விஜயராகவமுதலியார் M. L. C. ஜில்லாபோர்ட் தலைவர், வடஆற்காடு.
5. திவான்பகதூர். A. இராமசாமி முதலியார், B. A. B. L. M. L. A. ஆசிரியர் justice, சென்னை.
6. திவான்பகதூர். M. கிருஷ்ணசாமி ரெட்டியார். B. A. ஜில்லாபோர்ட் தலைவர், செங்கல்பட்டு.
7. ஆனரபில் சர். A. P. பாட்ரோ B. A. B. L. கல்விமந்திரியார், சென்னை.
8. திருவாளர். P. L. இராமசாமிநாயகர், மிட்டாதார், பாகல்பட்டி, சேலம்
9. திவான்பகதூர். T. A. இராமலிங்கம் செட்டியார் B.A.B.L. M.L.C. கோயம்புத்தூர்.
10. திருவாளர். W. பெருமாள் முதலியார் L. M. C. ஜில்லா சுகாதார அதிகாரி, சித்தூர்.
11. ஆனரபில் சர். P. N. சிவஞானம் பிள்ளை மந்திரியார் அபிவிருத்தி இலாகா, சென்னை.
12. S. சீனிவாச ஐயங்கார். B. A. B. L. காங்கிரஸ் தலைவர், சென்னை.
13. சக்கரவர்த்தி. இராஜகோபாலாச்சாரியார், காங்கிரஸ் தலைவர், சேலம்.
14. ராய. சொக்கலிங்கம் ஆசிரியர், ஊழியன், காரைக்குடி.
15. Dr. P. வரதராஜுலு நாயுடு ஆசிரியர், தமிழ் நாடு, சென்னை.
16. ரெவரெண்ட். பிரான்சிஸ். கிங்ஸ்பெரி, பேராசிரியர், சிலோன் சர்வ கலாசாலை, கொளம்பு.
17. திவான்பகதூர். தே. தெய்வசிகாமணி முதலியார், கூட்டுறவு துணை ரிஜிஸ்ட்ரார், சென்னை.

18. கா. அலமேலு மங்கத்தாயாரம்மாள் M. . . C. சென்னை.
19. Dr. N. வெங்கடசாமி செட்டியார் M. B. C. M. சூப்பரின்டெண்ட் இராயப்பேட்டை ஆஸ்பத்திரி, சென்னை.
20. ஆனரபில் P. T. ராஜன் Bar-at-law அபிவிருத்தி மந்திரியார், சென்னை.
21. சுவாமி. கஜராநந்தா இராமகிருஷ்ண மடம், காஞ்சிபுரம்.
22. P. D. சுவாமிநாத முதலியார் B. A. Income-tax Officer செங்கல்பட்டு.
23. Dr. K. ராமன்மீனன் M. B. B. S. F. R. C. S. ஜெனரல் ஆஸ்பத்திரி சென்னை.
24. ராவ்பகதூர். ஆனரபில் A. T. பன்னீர்செல்வம். Home member, சென்னை.
25. ராவ்சாகிப். J. C. சின்னப்பா M. A. L. T. டெப்டி டயரெக்டர் சென்னை.
26. S. V. பால்ராஜ் B. A. L. T. ஜில்லாகல்வி அதிகாரி, மதுரை.
27. தாமோதர முதலியார் B. A. L. T. ஜில்லாகல்வி அதிகாரி, விசாகப் பட்டணம்.
28. T. S. கிருஷ்ணமூர்த்தி ஐயர், ஜில்லாகல்வி அதிகாரி, சென்னை.
29. A. இராமாராவ், ஜில்லாகல்வி அதிகாரி, செங்கல்பட்டு.
30. L. G. லோபோ, ஜில்லாகல்வி அதிகாரி, செங்கல்பட்டு
31. D. சதாசிவ ரெட்டியார் M. A. சென்னைமாகாண உதவிடயரக்டர்.
32. ச. சச்சிதானந்தம் பிள்ளை B. A. L. T. சுகாரண்மைக்கழக கல்வி அதிகாரி, சென்னை.
33. சைவத்துறவறத்தூய்மையாளர் சிவஷண்முக மெய்ஞ்ஞான சிவாச்சாரிய சுவாமிகள்
34. S. ஜேம்ஸ் B. A. Dy Collector, திருநெல்வேலி.
35. அப்துல் சத்தார் சாயபு B. A. டெப்டி கலக்டர்.
36. C. D. நாயகம், டெப்டி ரிஜிஸ்ட்ரார், சென்னை.

பக்கம்

6. தேரையர் மருத்துவச் சாலை ... ... 16
7. வீமன் விளையாட்டு வெற்றிப்படை ... 17
8. பாலர் விவசாயப் பண்ணை .... ... 17
9. சாரணப்படை ... ... ... 18
10. வள்ளுவர் தொழிற்சாலை ... ... 18
11. வடலூர் வள்ளலார் மாணவர்விடுதி ... 18
12. குமாரசுவாமி ஆதித்திராவிட இலவச பாடசாலை ... ... ... 19

VIII. பொருள் நிலை ... ... ... 20

IX. பார்வையிட்ட பெரியார்களது உள்ளக்கருத்துக்களின் சுருக்கம் ... ... 21

X. *Extract from the inspection report* 1935 37

XI. நன்றி கூறல் ... ... 39

XII இணைப்புகள் ... ...

1. பாடசாலையின் வளர்ச்சியைக் காட்டும் அறிக்கை 40
2. மாணவர் வகுப்புவகை ... ... 40
3. பாடசாலைக்கு வரும் மாணவர் உறைவிடங்கள் ... ... ... 41
4. இலவச வாசகசாலைக்கு வரும் வெளியீடுகள் ... ... ... 41
5. விடுதியின் கால அட்டவணை ... ... 42
6. நன்கொடைகள்... ... ... 43
7. வரவு செலவு விவரம் ... ... 44
8. பள்ளியின் பல்வேறு அலுவல்கள் ... 45
9. பார்வையிட்ட அறிஞரில் சிலர் ... 47

# பாடசாலையின் தேவை

அருள் உள்ளம் வாய்ந்த பெரியீர்!

19 வயது நிறையப்பெற்ற இந்த இந்துமத பாடசாலையை இத்துணை நாட்கள் பாலூட்டி சீராட்டி வளர்த்து வந்த பெரியோர்கள் தாங்களே அன்றோ. தங்களது உதவியால் நாங்கள் செவிலித் தாயார் நிலைமையிலிருந்து இப்பள்ளியைப் பாதுகாத்து வருகின்றோம். வயது பெற்ற போதிலும் தக்க கைகொடுப்பாரின்றி இன்னும் இப்பள்ளி போதிய பலம் அடையாததாகவே இருக்கின்றது. அதற்காதரவாக வேண்டுவது தங்கள் பேருதவியே யாம்.

அன்பினீர்!

தங்களை நாங்கள் வேண்டுவது ஒன்றே. தங்களது குடும்பத்தின் பிற்கால வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்நிலையைத்தேட விரும்புகின்றீர்களன்றோ! அவ்வாறாய விருப்பம் நிறைவேறுமாயின் பாடசாலையின் தேவையும் நிறைவேறும். அதன் வழியும் ஒன்றே! இப்பாடசாலையை நடத்தும் நாங்கள் பம்பாய் ஓரியண்டல் உயிர் ஒப்பந்த நிதியில் (Oriental Govt Securitry Life Assurance co.) பிரதிநிதிகளாக இருக்கின்றோம். அதன் மூலம் வருமானம் முழுவதையும் பாடசாலையின் தேவைக்கே செலவு செய்கிறோம். மேலும் இப்பள்ளி பிற் காலத்தே சிறந்தோங்குவதற்காக எங்கள் வாழ்க்கைகளையே ரூ 30,000க்கு ஒப்பந்தம் செய்து பாடசாலைக்கே வைத்திருக்கின்றோம். அதற்காக ஆண்டுதோறும் ரூ. 1,500 பிரிமியம் கட்ட வேண்டி இருக்கின்றது. பாடசாலையின் தேவையுடன் இத்தேவையும் ஒன்று சேர்ந்து செலவு பெருகுகின்றதன்றோ?

தாங்கள் தங்கள் குடும்ப பிற்காலத்துக்காகச் சேர்த்து வைக்கும்பொருளை இவ்வுயிர் ஒப்பந்த நிதியிடமே சேர்த்துவைக்க நினைவு கொள்ளுங்கள். இக்கம்பெனி மற்றெல்லாவற்றிலும் சிறந்ததென்பது உலகறிந்த உண்மை. அவ்வாறு ஒப்பந்தம் செய்து கொள்ளும் பொழுது எங்கள் மூலமே செய்து கொள்ள வேண்டுகின்றோம், இதனால் நமது பாடசாலை நலமுறும். தாங்கள் புகழையும் புண்ணியத்தையும் ஒருங்கு பெற்று உயர்வீர்கள்,

இங்ஙனம் தங்கள் பணிவு மிக்க

W. T. பஞ்சாக்ஷரம்,

*Retired Superintendent Military Accounts Department,*

62. மகம்மது உஸ்மான் ரோட், தியாகராய நகர், மதறாஸ்.

வா. தி. மாசிலாமணி, இந்துமத பாடசாலை, வாலாஜாபாத், S. I. R.

---

குமரன் பிரஸ், காஞ்சீபுரம்.

மகாமகோபாத்யாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்